

சூரியனோடு
சில நாட்கள்
பாலகுமாரன்

# சூரியனோடு சில நாட்கள்

## 1

பத்து மாதங்களுக்கு முன்பு ஒரு படத்துவக்க விழா. அழைப்பு வந்திருந்தது. இவர் தலைமை, இவர் முன்னிலை, இவர் தயாரிப்பு, இவர் இயக்கம், இவர் இசை என்றெல்லாம் பத்திரிகையில் அச்சிடப்பட்டிருந்தாலும், குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து வாழ்த்துபவர் ரஜினிகாந்த் என்று பெரிதாய்- நடு மையமாய் - கண்ணைப் பறிக்கிற விதத்தில் இருந்தது.

அடடே. பார்த்து நெடுநாளாயிற்று. பேசி வெகுகாலமாயிற்று. இன்று சற்று நெருங்கி நின்று 'ஹலோ' சொல்ல வேண்டும். முடிந்தால் பேச வேண்டும்.

ஓரமாய் நிற்பதை மாற்றிக் கொண்டு, அவர் வரும் வழியில் சரியான கோணத்தில் நின்று கொண்டேன். அருகே வந்து பேசுபவர்களிடம் குறைவாகப் பேசி, அவர் வரும் வழியையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஸ்டுடியோ வாசலுக்கு வந்துவிட்டதாய் சொன்னார்கள். சட்டென்று பரபரப்பானார்கள். ஓரமாய் வைத்திருந்த பூககூடை நூறு. மடமடவென்று எடுத்துக் கொண்டார்கள். ஒருவரை ஒருவர் அத்ட்டி மிரட்டி சத்தம் போட்டு வரிசையானார்கள், வரிசையாகும் முயற்சியில் என்னைப் பின்னடையச் சொன்னார்கள். பின்னடைந்து படியேறினேன். இடதும் வலதுமாய் இளைஞர்களாய் - சினிமாவில் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டவர்களாய் ஒரு நூறு நூற்றிருபது பேர் இருப்பார்கள்.

அவர் வண்டியிலிருந்து இறங்கி நிமிர்ந்து மலரச் சிரித்து கைகூப்ப, பெரிய கைதட்டல். இரண்டு வரிசையாய் நின்ற நண்பர்களுக்கு இடையே நடக்க,

# பாலகுமாரன்

பூக்கூடையிலிருந்து ரோஜாப்பூ மழையாய் கொட்டப்பட்டது: தூவப்பட்டது. சில கணங்களுக்கு எங்கும் பூ. இருபதடி உயரத்தில் எல்லா நேரமும் அந்தரத்தில் பூக்கள் இருந்தன. தரைபட்டு, துள்ளி வாசம் எழுப்பின. பூக்கள் வீசப்பட்டு தன்மேல் பொழிவது கண்டு சட்டென்று ஒரு தயக்கம் அவருக்கு - என்ன இது என்ற பார்வை. உடனே சிரிப்பு.

சரி. இப்படி ஒரு அன்பா. சரி என்று கைகூப்பி ராஜநடையுடன் .ஒலிப்பதிவுக் கூடத்துக்கு வர, மற்றவர்க்கெல்லாம் மனசுள் என்ன இருந்ததோ தெரியவில்லை; என்னுள் சட்டென்று ஒரு பொறாமை தாக்கியது.

ரஜினிகாந்த் மனிதர்தானே. தெய்வமாய் போற்றுகிறார்களே.

ரஜினிகாந்த் நடிகர்தானே. ஒரு அரசருக்கு உரிய



வரவேற்பு தருகிறார்களே.

மலர் மழையில் நடந்துவருமளவுக்கு என்ன உயர்த்தி... இது அன்பின் வெளிப்பாடா. சட்டென்று ஒரு புதுவிதமான காட்சி கண்ட திகைப்பில், திகைப்பின் விளைவாய் உள்ளே பொறாமை பொங்கியது.

இது என் புத்தி.

எங்கே முதன்மை எவருக்கு நடந்தாலும் அது நானாய் இருக்க வேண்டும். எனக்கும் நடக்க வேண்டும் என்கிற புத்தி.

இதைச் சொல்லிக் கொள்ள எனக்கு வெட்கமில்லை. உற்றுப் பார்த்தால் உங்களில் நிறையப் பேருக்கு புத்தி இப்படித்தான் இருக்கும். உண்மையை மட்டும் சொல்வது என்று ஊரார் தீர்மானித்தால் நூற்றுக்கு தொண்ணூற்றெட்டு பேர் இப்படித்தான் சொல்வார்கள்.

நான் மனசுள் பொங்கும் உணர்வுகளை காமம், காதல், பொறாமை, ஏக்கம், பேராசை இவைகளைத் தடுப்பதில்லை. ச்சீ வெளியே வராதே' என்று எண்ணங்கள் வந்தால் அடக்குவதில்லை. மாறாய் அனுமதித்து விடுவேன். அது.. அந்த எண்ணம் செலவாகும் போது மனசு கூர்மையாகி ஆராய்ந்து அலசி சுத்தம் செய்துவிட்ட பிறகே அனுமதிப்பதுண்டு.


சட்டென்று ரஜினிகாந்த் மீது பொறாமை வந்தது. பொறாமைப்படுகிறோமே என்று வெட்கமும் வந்தது.

டேய் தம்பி, மனசுத்தம்பி, எதுக்கு பொறாமை.அவரை ஜனங்கள் விரும்ப ஆயிரம் காரணங்கள் இருக்கும். உனக்கு எதுக்கு பொறாமை. வரிசையில் நின்ற இளைஞர்களுக்கு அவர் பல்வேறு உதவிகள் செய்திருக்கக்கூடும். இது தெரியாமல் ஏன் புழுக்கம். உனக்கு அவர் கெடுதல் எதுவும் செய்ததுண்டா. இன்முகம் காட்டாமல் முகம் திருப்பிப் போனதுண்டா. இல்லையே.

அப்படியிருக்க எதனால் புழுக்கம்.

முதலில் மற. புழுக்கம் விடு.

உண்மையில் உன் உணர்வு பொறாமையல்ல; நீ பயந்து விட்டாய். நூறு பேர் ரோஜா தூவி மொத்த சூழ்நிலையையும் கண நேரத்தில் மாற்றியது உன்னை



## திரைத் துளி

தமிழ்த் திரையுலகில் முதல் பெண் இயக்குநர் டி.பி.விஜயலட்சுமி.

அதிர அடித்துவிட்டது. பெரிய ஆளுயர மாலைபோட்டிருந்தாலோ, சரிகைச் சால்வை சார்த்தியிருந்தாலோ, கற்பூர ஆரத்தி காட்டியிருந்தாலோ உனக்கு அதிர்ச்சி ஆகியிருக்காது. பூமழை 'ஹா' என்று வியக்க வைத்துவிட்டது. வியப்பு வழியே வந்த பொறாமை இது.

டேய் தம்பி, மனசுத் தம்பி தணிந்து போ, கேட்டு நடந்திருக்குமா. திட்டமிட்ட செயலா.

அந்த மனிதனை உனக்குத் தெரியும்.

'ஹலோ' என்று தானாய் நாலடி வந்து கைகுலுக்கும் ஆள். ஒரு போட்டோ எடுத்துக்கணும் என்று யார் கேட்டாலும், எப்போது கேட்டாலும், எத்தனை நேரமானாலும் அலுக்காது சம்மதம் சொல்கிற நடிகர். சிறிது முகவாட்டம் தெரிந்தாலும் உடன் வேலை செய்யும் தோழர்களிடம் என்ன காரணம் என்று உடனே தயங்காது கேட்கும் மனிதன். இங்கு இப்படி மனிதர்கள் அபூர்வம். அதனால்தான் இந்த பூமழை, பூப் போன்ற அன்புமழை.


பொறாமையை விட்டு உற்றுப்பார். உன்னை, ரஜினியை இடைவிடாது பார்.

உனக்கு பேச வாய்ப்பு கிடைத்தாலும் உன் அருகே அவர் பிறரோடு பேசுவதைப் பார்க்கக் கிடைத்தாலும் உற்றுப்பார்.

அப்படி என்ன உயர்வு. கவனி.

மனிதர்கள் இயற்கையின் குழந்தைகள். பூமி, வாயு, அக்னி, நீர், ஆகாயம் என்று இயற்கைச் சக்திகள் கலந்தவர்கள்.

# திரைத் துளி



முதன்முதலில் நடிப்புக்கு ஒரு லட்சம் சம்பளம் பெற்ற நடிகை கே.பி.சுந்தராம்பாள். இவரது குரல் வளம் கேட்போரை ஒரே நிலையில் கட்டிப் போடும் வல்லமை உடையது. இவரது நடிப்பைக் காட்டிலும் குரல் இனிமையுடையது. என்றென்றும் திகட்டாதது.தமிழை இவர் வாசிக்கும் அழகில் தமிழ் மகளே சொக்கிப் போவாள்.

சூரியனின் உதயம் சந்திரனின் குளுமை, நீரின் சலசலப்பு, ஆகாயத்தின் பெரும் சக்தி வாயுவின் அலையல் - எல்லாம் மனிதர்களில் உண்டு.

மனிதரைக் கவனிப்பது இயற்கையைக் கவனிப்பது போல.

ரஜினிகாந்த் என்ற மனிதனை, அந்த மனிதனை நேசிக்கும் மனிதர்களைக் கவனி. ரஜினிகாந்த் உன் சகஜீவி. தென்னிந்தியா முழுவதும் வளைத்துப் பிடித்த ராஜராஜ சோழன். மராட்டாவிலிருந்து நகர்ந்து, கர்னாடகத்தில் குடியேறி, தமிழ் தேசம் வளைத்த சாளுக்கியன். அன்பான புலிகேசி.

இவரைத் தெரியாது என்று தென்னிந்தியாவில் எவராவது சொல்வார்களா. சகலருக்கும் தெரிந்த முகம். சகலரும் பல தடவை உச்சரித்த பெயர். ஆறு மாதக் குழந்தையிலிருந்து அறுபது தாண்டிய பெரியோர்கள் வரை பார்த்துப் பரவசப்பட்ட முகம்.

டேய் தம்பி, மனசுத் தம்பி உற்றுப்பார். ரஜினிகாந்த் நெற்றியை, கண்களை, புருவத்தை, மூக்குக் கூர்மையை, கை விரல்களை, உள்ளங்கையை, தோல் நிறத்தை, நிற்பதை, நடப்பதை, முக அசைவை, கண் உருளலை, மூச்சு விடுதலை உற்றுப்பார்.

எதனால் இது இப்படி ஒரு சிறப்பு பெற்றது. ஒட்டாது உற்றுப்பார். ஐயோ என்று ஆங்காரப்படாதே.

ஆஹா என்று கொண்டாடவும் செய்யாதே. ஒதுங்கி நின்று உற்றுப்பார். விருப்பு - வெறுப்பின்றி ரஜினியை ஸ்வீகரி.

இப்படி தீர்மானம் செய்த ஆறாம் மாதம் மறுபடி சந்தித்தேன். மிக நெருக்கமாய் மூச்சு விடுகிற ஓசை கேட்கும் தூரத்தில் சந்தித்தேன்.

## 2

அது.ஒரு ப்ரிவியூ தியேட்டர்... திரைப்படம், வழக்கமான தியேட்டர்களில் திரையிடப்படும் முன் இங்கே டெக்னீஷியன்களுக்காகவும் நடிக நடிகையருக்காகவும், விநியோகஸ்தர்களுக்காகவும் திரையிட்டுக் காட்டப்படும்.

அந்தப் ப்ரிவியூ தியேட்டரில் 'ஜென்டில்மேன்' திரையிடப்பட்டிருந்தது. உள்ளே ரஜினி படம் பார்க்கிறார் என்பது எனக்குத் தெரியாது. படம் பார்த்துவிட்டு, சக டெக்னீஷியன்கள் படம் எப்படி என்று அபிப்பிராயம் சொல்வார்கள். கேட்போம் என்று போனேன். படம் முடிந்துவிட்டது என்று தெரிந்தது.

அந்தத் தியேட்டரில் நாலுபேர் போகக்கூடிய லிஃப்ட் இருந்தது. ஏறி கதவு சார்த்தி இரண்டாவது மாடி குமிழ் அழுத்த, பெட்டி உயரே நகர்ந்தது, லிஃப்ட் இரண்டாவது மாடி தொட்டது. மாடியில் சிரிப்புச் சத்தம் கேட்டது.

கதவு திறக்க ரஜினிகாந்த். நான் வெளியே வரமுயல, ரஜினி என்னை மறுபடி லிஃப்ட்டுக்குள் தள்ளினார். "பாலகுமார் சார்... க்ளாஸ்... ஏக்ளாஸ் படம். ரொம்ப நல்லா வந்துருக்கு" கைகுலுக்கினார். அவரும் இன்னொரு நண்பரும் உள்ளே வர, லிஃப்ட் கதவு சார்த்தி தரை நோக்கி போகும் குமிழை அந்த நண்பர் அழுத்த, லிஃப்ட் கீழிறங்கத் தொடங்கியது. ஐந்தடிக்கு ஐந்தடிபெட்டியில், அவர் மூச்சு என்மீது படும் அளவு நெருக்கமாய் நின்று படம் பற்றி சில வாக்கியங்கள் சொன்னார். என் காதில் ஏறவில்லை. எல்லாம் பாராட்டுக்கள் என்று தெரிந்தது. ஆனால் மனசுள் வாங்கவில்லை.

ரஜினிகாந்த் அருகே இருக்கும் திகைப்பு மட்டுமல்ல காரணம். ஒரு சிறிய வெட்கமும் உள்ளே

சேர்ந்து, அவர் கூறும் பாராட்டுக்களை ஏற்க மறுத்தது.

சினிமா ஒருடீம் ஓர்க். ஒரு படத்தின் வெற்றிக்கு இன்னார்தான் காரணம் என்று கூற இயலாது. ஒரு நூறு பேர் மிக கவனமாய் ஒருங்கிணைந்து, புரிந்து கொண்டு, பரஸ்பரம் விட்டுக்கொடுத்து செயலாற்ற வேண்டிய இடம்.

நாவல் ஒரு தனிமனிதனின் சக்தி. ஒரு நாவல் சிறப்புடையதானால் எழுத்தாளரே கொண்டாடப்பட வேண்டியவர். நாவல் வந்த பத்திரிகையோ, அச்சிட்டவரோ, கம்பாஸிடரோ அங்கு பேசப்படுவதில்லை.

ஆனால் சினிமா நூறு துடுப்புகள் போடப்பட்ட நீண்ட ஓடம். எந்தத் துடுப்பால் படகு வேகமாயிற்று என்று சொல்வது கடினம். நடுவே நாலு துடுப்பு சரியாகப் போடவில்லையெனில், வேகம் குறைந்து ஆட்டம் அதிகமாகும். மற்ற துடுப்புகளுக்குச் சிரமம் வரும் என்பதும் நிச்சயம்.

போடப்பட்ட நூறு துடுப்பில் ஏழாவது துடுப்பைப் பார்த்து,

'ரொம்ப சந்தோஷம்.... ஜெயிச்சுட்டீங்க' என்றால், என்ன பதில் சொல்வான் அந்தத் துடுப்புக்காரன்.

பாராட்டை ஏற்றும், ஏற்காமலும் கைகூப்பி நிற்க வேண்டியதுதான்.

பாராட்டிய ரஜினிகாந்துக்கும் இது தெரியும். அவரும் பல நீண்ட ஓடங்களை ஓட்டிய துடுப்புக்காரர்தான்.

ஜெயித்து கரையேறியபோது, எதிர்ப்பட்ட துடுப்பாளை ரஜினிகாந்த் கைகுலுக்கிப் பாராட்டுகிறார் என்பது சிறிது நேரம் கழித்து புரிந்தது.

லிப்ட் தரை தொட்டதும்,

"எல்லாப் பெருமையும் டைரக்டருக்கே." என்று சொன்னேன்.


"உண்மை..." ரஜினி பதில் சொன்னார். "அதோடு கூட இது ஒரு நல்ல டீம். படத்தில் எல்லா கலவையும் சரியான விகிதத்தில் கலக்கப்பட்டிருக்கிறது. என் வாழ்த்துக்கள்."

மறுபடி அவர் மூச்சுக்காற்று என்மீது பட்டது. என் காற்றும் அவரைத் தொட்டிருக்கும்.

லிஃப்ட் திறக்க, சரட்டென்று வெளியேறி கார் ஏறிப் பறந்து போனார்.

வேகமான ஒரு சுழல்பந்து தலை உரசிப் போனது போல, அந்தப் பந்தை எப்படி விளையாடுவது என்று தெரியாத பேட்ஸ்மேன் போல திகைத்துக் கிடந்தேன்.

'டேய் தம்பி, பாலகுமார் தம்பி, முட்டற மாதிரி ரஜினி எதிர்க்க வந்தே... அதனால் பாராட்டு கிடைச்சுது. ரொம்ப எமோஷனலாயிடாதே... இது மரியாதை... அன்பு. பெரிய முக்கியத்துவம் உனக்கு எதுவும் இல்லை. 'அடடா... ரஜினியே கைகுலுக்கினார்...' நாலுபேர்கிட்ட



"இங்கே ஒரு அலோபதி டாக்டர் வைத்தியம் பார்ப்பாரே அவர் எங்க காணோம்?"

"அவரு இப்ப குரோர்பதி ஆயிட்டதால, அலோ பதி டாக்டர் வேலையை விட்டுட்டார்"

-சின்ன.காந்திநேரு, அரிதாரிமங்கலம்.

பேசாதே... சும்மா இரு. திகைப்பிலிருந்து வெளிவந்தேன்.

மற்ற நண்பர்கள் தியேட்டர் வாசலில் பாராட்டினார்கள். இன்னொரு காட்சி ப்ரிவியூ தியேட்டரில் ஆரம்பமாக, வீடு திரும்பினேன்.

படியேறினேன்.

"ரஜினி வீட்டுலேர்ந்து போன் வந்தது... ஜெயராம் கேட்டாரு உங்களை".. வீட்டில் கூறினார்கள்.

"அப்படியா... இப்பதானே பேசிட்டு வரேன். நான் எண்களைச் சுழற்றினேன். ரஜினியின் உதவியாளர் ஜெயராம் போனை எடுத்தார். "அண்ணன்

பேசணும்னார் சார்" ஒரு நிமிஷம், சில விநாடிகள் நகர்ந்தன.

"ஹலோ பாலகுமார் சார்... பிரமாதமா பண்ணிட்டீங்க... அங்க நிறைய பேசமுடியலை. வாசல்ல கும்பல் ஜாஸ்தியாயிடுச்சு. அடுத்த ஷோ நம்மால ஜாம் ஆயிடக்கூடாதுன்னு வண்டியேறிட்டேன். படத்துல பல இடங்கள் தனியா தெரிஞ்சுது. ஷங்கர் யாரு...யார்கிட்ட இருந்தாரு."

பத்து நிமிடங்கள் படத்தின் பல சிறப்புகள் பற்றிப் பேசி.. மனதாரப் பாராட்டி.. வாய் விட்டுச்சிரித்து... அப்படியானால் வெறுமே எதிர்ப்பட்டதால் வெளிவந்த பாராட்டில்லையா... உண்மையாகவே என் வேலை பிடித்திருக்கிறதா... இது மனசு திறந்த பாராட்டா... சக தொழிலாளியைக் கட்டிப் பிடித்து உற்சாகமூட்டும் செயலா.

சினிமா ஒரு டீம் ஓர்க்...

இதனால் சில சங்கடங்கள் உண்டு. நாவலில் கிடைக்கிற தனித்துவம் சினிமாவில் எவருக்கும் கிடையாது.

ஒரு காட்சி சிறப்பானதற்கு வசனமும் காரணமாய் இருக்கலாம். காட்சி அமைப்பு, காமிரா, நடிக நடிகையரின் மேக்கப், செட் ப்ராப்பர்டி, லொகேஷன் போன்றவையும் காரணமாய் இருக்கலாம்.

ஒரு நல்ல காட்சி வசன பலமின்மையால், வசன பலமிருந்தாலும் காமிரா கோணம் சரியின்மையால் காமிரா, வசனம் சரியாய் இருப்பினும் நடிகர் உணர்ந்து செயலாற்றாததால் ; நடிப்பு, காமிரா, வசனம் சரியாய் இருப்பினும் எடிட்டரின் கவனக்குறைவால் சிதையலாம்.

சினிமா ஒரு நெட்டி வேலை...

ஒரு நெட்டி பொம்மையை - கோவில் கட்டடம் போன்ற நெட்டி பொம்மையை நூறு பேர் சேர்ந்து செய்யும் வேலை.

ரஜினி தனித்தனியே எல்லோரையும் என்னிடம் பாராட்டினார். "எனக்கு டைரக்டர் நம்பர் தெரியாது. அதனால் உங்ககிட்ட என் பாராட்டைச் சொல்றேன். ஷங்கர் கிட்டே என் பாராட்டை சொல்லுங்க."

நண்பர் ரஜினிகாந்தின் பாராட்டு பற்றி யூனிட்டில் சொல்ல, அங்கே பலபேருடைய முகம் மலர்ந்து.. மகிழ்ந்து மறுபடி என்னைச் சொல்லச்சொல்லி கேட்டு புளகாங்கிதமடைவதை நான் உணர்ந்தேன். ரஜினிகாந்த் இங்குள்ள சினிமாக் கலைஞர்களுக்கு அவ்வளவு முக்கியம். அவர் பாராட்டு மிகப்பெரிய பெருமை.

சினிமாவில் ஒரு வெற்றிப் படத்தை இப்படி மனம் நிறைய பாராட்டுபவர்கள் மிகக்குறைவு.

ப்ரிவியூ தியேட்டரில் நான் பல முகங்களை உற்றுக் கவனித்திருக்கிறேன்.

"படம் ரொம்ப நல்லா வந்துருக்கு. நிச்சயம் நூறு நாள். கவலையே படாதீங்க." டைரக்டரிடம் கைகுலுக்கிவிட்டு, தியேட்டர் தாண்டி தெருவுக்கு வந்ததும், எப்படி படம் என்று எதிர்ப்பட்டவர் கேட்க,

"ஊத்திக்கிச்சு ஊத்திக்கிச்சு" என்று நீட்டி முழக்கி சிரிப்பவர்களை கண்டிருக்கிறேன்.


"கிட்டத்தட்ட இதே ஸ்டோரி நான் சொன்னேன். எவனும் கேட்கலை, இப்ப அதே கதைய வச்சு சக்ஸஸ் ஆக்கிட்டாம் பார்..."

"சக்ஸஸின்றே..."

"அட, நாப்பது நாள் ஓடும்பா... பாட்டு சரியா அமைஞ்சு போச்சு. நடிகர் சரியா அமைஞ்சு போச்சு... வச்னம் கூட சரியா வுழுந்துடுச்சுப்பா."

இந்த வெற்றி, பிறர் திறமை என்பது ஏற்காமல், தெய்வச் செயல், எதேச்சை என்று பாராட்டும் பாதி

## சிந்துளி



நடிகராக இருந்து உலகின் மிகப் பெரும் வல்லரசு நாட்டிற்கு அதிபரானவர் ரொனால்டு ரீகன். இவர், படிக்கும் காலத்தில் கால் பந்து, கூடைப்பந்து, விளையாட்டு வீரராகத் திகழ்ந்தவர். பின் விளையாட்டு விமர்சகராகவும் இருந்தவர். புகைபிடிக்கமாட்டார்.

மனங்களைக் கண்டிருக்கிறேன்.

ரஜினி முழுமையானவர்...

பிறகு ஒருநாள் அவரிடம், 'நீங்கள் இத்தனை மனமுவந்து பாராட்டிப் பேசுவீர்கள் என்று நினைக்கவேயில்லை' என்று சொல்ல, சிரித்தார். நிதானமாய்ப் பேசினார்.

"சினிமால ஒருபடம்கூட ஃபெயிலியர் ஆகக்கூடாது. சுமாரான படத்தைக்கூட நல்லா பாராட்டணும். நல்ல படத்தை வாய்விட்டு மனசார பலமுறை பாராட்டணும். அந்தப் பாராட்டால இன்னும் நாலு நல்ல படம் சம்பந்தபட்டவங்க தரணும். சினிமா இன்டஸ்ட்ரீல ஒரு படம் கூட ஃப்பெயிலியர் ஆகக்கூடாது. அது யார் படமா இருந்தாலும் சரி... என்ன விதமான படமா இருந்தாலும் சரி..."

தனக்கு ஒரு கண் போனாலும், பிறருக்கு இரண்டு கண்களும் போக வேண்டும் என்று வேண்டும் உலகத்தில் இந்த மனிதர் வித்தியாசமானவர்.

எதனால் இப்படி... பலபேருக்கு இல்லாத இந்தத் தெளிவு ரஜினிக்கு எப்படி வந்தது.

"இது மொத்தமும் ட்ராமா, இந்த நடிகன் அந்தஸ்து, பணம், புகழ், கைதட்டல், பூமாலை, பூத்தூவல் எல்லாம் நர்டகம். இந்த நாடகத்துக்கு வேற யாரோ ஒருத்தர்தான் டைரக்டர்.

இந்த உலகத்துல உங்களுக்கு ரைட்டர் வேஷம். எனக்கு நடிகன் வேஷம். அவருக்கு மேக்கப் மேன் வேஷம். கொடுத்த வேஷத்தை டைரக்டர் திருப்தி ஆகற மாதிரி செய்யணும். அந்த டைரக்டர் பேரு கடவுள் ஆண்டவர், அல்லா, ராம், சிவா, புத்தன், விஷ்ணு ஏதாவது வச்சுக்கலாம். எல்லாப்பணமும், புகழும் டராமா, நாடகம். இது நானில்லை."

ஒருநாளில் ரஜினி பேச, எனக்கு கேள்வி வந்தது. ரஜினி புரிந்து பேசுகிறாரா...இல்லை, எவரேனும் பேசியது கேட்டு பேசுகிறாரா,,, சந்தேகம் வந்தது.

நான் எழுத்தாளன்... எதையும் சந்தேகத்தோடு பார்ப்பதே என் வழக்கம்...

# 3

சந்தேகம் வந்தபோதே மனசு சட்டென்று வெகுதூரம் பின்னோக்கிப் போயிற்று.

தர்மயுத்தம் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த போது எனக்கு ரஜினிகாந்த் அவர்களோடு பழக்கம் ஏற்பட்டது. ரஜினிகாந்தின் பரபரப்பான நேரம் அது. வெற்றிகள் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தன. ஏதோ ஒரு விதத்தில் அவர் எல்லோராலும் கவரப்பட்டார். அவரைப் பற்றிய கிசுகிசுக்கள் உச்சகட்டம் அடைந்திருந்த காலம் அது.

சாவி பத்திரிகையின் சார்பாய் அவரை பேட்டி காணச் சென்றிருந்தேன்.

காலை எட்டு மணி இருக்கும்.

"டிபன். சாப்பிட்டீங்களா." - ரஜினி கேட்டார்.

"இல்லை."


"கார் எங்கே." - தேடினார். அவருடைய கார் எங்கேயோ போயிருந்தது.

"எதில் வந்திருக்கிறீர்கள்."

"ஸ்கூட்டர்."

"வாங்க போவோம்."

நான் வண்டியை ஸ்டார்ட் செய்ய, ரஜினிகாந்த் என்னிடமிருந்து வண்டியை வாங்கிக் கொண்டார். நான் பிலியனில் ஏறிக் கொள்ள, வண்டியை அவர் ஓட்டினார்.



"எந்த ஒரு நல்ல விசேஷத்திற்குப் போனாலும் அவர் வாய் சும்மா இருக்காது"

"ஏன்?"

"அவருதான் நாதசுர வித்வான் ஆயிற்றே!"

-சின்ன.காந்திநேரு,
அரிதாரிமங்கலம்.

டிரைவ்-இன் ஓட்டலுக்கு வண்டி போயிற்று.

கூட்டம் அதிகமில்லாத அந்த நேரத்தில் நிறைய மனம் விட்டுப் பேசினார். அவர் பேசிய விஷயங்கள் பலது எனக்கு இன்னும் நினைவில் இருக்கின்றன. என் வாழ்க்கையில் அந்தப் பேச்சுக்கள் மிகவும் உதவின.

அவர் சொன்ன நேரடி வாக்கியங்கள் நினைவில் இல்லை. அதனால் அதன் சாராம்சம் சொல்கிறேன்.

"எவர் உயர்ந்தாலும், உன்னத நிலைக்கு வந்தாலும் அவரைத் தூற்ற, அந்த நிலையிலிருந்து அவரைச் சாய்க்க, உலகத்தின் ஒரு பகுதி கடுமையாய் முயலும். அதுவும் மிகச் சாதாரணமாய் இருந்தவர் முன்னேறினால் அவருக்கு எதிரிகள் உடனே உருவாகி விடுவார்கள்.

தனக்கு யோக்கியதை இருந்தும் உயர்வு கிடைக்கவில்லை. யோக்கியதை இல்லாத இவனுக்குக் கிடைத்து விட்டது என்று சிலர் பொறாமைப்படுவார்கள்.

இவ்வளவு உயரத்துக்கு இவர் வந்துடுவார்னு அன்னிக்கே தெரிஞ்சிருந்தா இன்னும் க்ளோசா ஒட்டிட்டிருந்திருப்பேனே. தெரியாத போயிடுத்து. இப்ப ஒட்ட ட்ரை பண்ணுவோம். ஓட்டவிடலைன்னா தொந்தரவு பண்ணுவோம். எனக்கு தெரியும்டா உன்னைப் பத்தி. என்கிட்ட டீ வாங்கி குடிச்சவன்தான். என்று சொல்லிச் சொல்லி எரிச்சல் மூட்டுவோம் என்று வேறு சிலர் முயல்வார்கள்.

கண்டக்டரா, கன்னடமா. தமிழ், இங்கிலீஷ், ஃப்ரெஞ்ச் எதுவும் தெரியாதா. டான்ஸ் வராதா... நாவல் படிக்கிற பழக்கம் இல்லையா. ஸ்கேட்டிங், ரைஃபிள் ஷூட்டிங். ஒண்ணும் தெரியாதா. பின்ன எப்படி இவ்வளவு உயரத்துல. ஏதோ குருட்டு அதிர்ஷ்டமா. நமக்குத் தெரிஞ்சதெல்லாம் அவுத்துவிட்டு உனக்கு என்ன தெரியலை பார்னு குழப்பி வுட்டுரலாம். இப்படியும் சிலர் முயல்வார்கள்.

இவர்கள் எல்லோரையும் அமைதியாய் அதிகம் எதிர்ப்பு காட்டாது சமாளித்தாக வேண்டும். அளவுக்குமீறிய பொறுமை வேண்டும். பொறுமையே சிறிதும் இல்லாத நான் வன்முறையாய், வலுக்கட்டாயமாய் மௌனத்தை - அமைதியை வரவழைத்துக் கொள்கிறேன். சிலசமயம் சிதறடித்து



விடுகிறேன். நான் பெரிய தத்துவவாதியில்லை. நான் அதிகம் புத்தகம் படித்ததில்லை. ஆனால் இரவில் மனம் நொந்து புரண்டு படுக்கிறபோது எனக்கு நடந்த வேதனைகளின் வேர் எது என்று யோசிக்கிறபோது வாழ்க்கை மொத்தமும் பிடிபட்டுப் போவது போல் இருக்கிறது.

மனிதர்கள் ஆரம்பத்தில் இப்படித்தான் வேதனைப்படுத்துவார்கள். தாங்கிக் கொள் என்று தெளிவாய் தெரிகிறது. எதிர்த்தால் சரிவு நிச்சயம். அதனால் பிறர் ஹிம்சையைத் தாங்கி அமைதியாய் நமது அடுத்த வேலையைச் செய்ய.. இன்னும் உயர்வு வரும். மனிதர்கள் தாக்கவே முடியாத உயர்வுக்குப் போய்விட வேண்டும். அதற்கு வேறு எதிலும் கவனம் சிதறாது உழைக்கவேண்டும்."

இது ரஜினிக்கு மட்டுமல்ல, பாலகுமாரனுக்கும் பொருந்தும். செய்யும் வேலைக்குக் கேலி வரும். அது மனிதர் குணம். நமக்கு அடுத்தவேலைதான் கவனம். கேலி சாதாரணம்.

வார்த்தைகளாய் அன்று இருந்த ரஜினி, வார்த்தைகளை உள்வாங்கி ஜெயித்திருக்கிறார். உங்களுக்கு இது அது தெரியுமா எனக்கேட்டு, இழிவுபடுத்துவார்கள் என்று நினைத்த ரஜினிகாந்த்,

இன்று சித்தர்கள் பாடல் பற்றி சொல்லச் சொல்லி கேட்கிறார். ஓஷோ என்கிற பகவான் ரஜினீஷ் தத்துவங்கள் பற்றி படிக்கிறார். ரமணர் வாழ்க்கை பற்றியும், வாக்கு பற்றியும் அதிகம் தெரிந்திருக்கிறார்.

தத்துவங்களைத் தெரிந்து வைத்துக் கொள்வது மட்டும் பெருமையான விஷயம் இல்லை. அவைகளை உள்வாங்கி ஒட்டி வாழ்தல் முக்கியம் என்பது புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்.

ரஜினிகாந்த் கோபப்படுவதில்லை. ஆனால் தீர்மானமாய் இருக்கிறார்.

ரஜினிகாந்த் இனிமையாய் இருக்கிறார். ஆனால் எல்லாவற்றுக்கும் இணக்கமாய் இருந்து விடுவதில்லை.

மனசு விட்டு பாராட்டுகிறார்.

"பாலகுமார் சார், அந்த காலேஜ் அட்மிஷன் பத்தி யுவராணி பேசறது நல்லாயிருந்தது."

நான் அன்றைய ஷூட்டிங்கிற்கு எழுதிக் கொடுத்து விட்டு வேறு வேலைக்குப் போய் விட்டேன். ஆனாலும் கூப்பிட்டு பாராட்டி, "ரஜினி சார்... நான் நேத்து ஷூட்டிங்க்கு வரலைன்றதுக்காக இப்படி கூப்பிட்டு பாராட்டற மாதிரி..."

"கடவுளே... மனசாரப் பாராட்டக் கூடாதா. ஏன் சந்தேகமாவே பார்க்கறீங்க. எனக்கு பிடிக்காத விஷயத்தை மூஞ்சிக்கு நேர சொல்லிவிடுவேன்."

"இதுவரைக்கும் சொன்னதில்லை."

"பிடிக்காத எதுவும் இதுவரை உங்களாண்ட எனக்குத் தெரியலை. சொல்லலை."


ஆனால் சட்டென்று ஒருநாள் மெத்தென்ற குட்டு விழுந்தது.

"இந்த ஸீனை இப்படி ஆரம்பிச்சா என்ன..." அவர் சொல்ல ஆரம்பிக்க, அதனுடைய நூல் புரிந்து கொண்ட நான் அதே விதமாகவே யோசித்து வைத்திருந்த சந்தோஷத்தில் குறுக்கிட்டு, "கரெக்ட்... இது சொன்னதுக்கப்புறம் அந்த டயலாக் தொடர்ச்சியா..."

சட்டென்று உற்றுப் பார்த்தார்.

"பாலகுமார் சார்... உங்கக்கிட்ட ஒரு தப்பு இருக்கு... சொல்லட்டா."

சினித் துளி



சிவாஜி கணேசனுக்கு இணையான நடிகர் உலகத்தில் எவரும் இல்லை. இவருக்கு அடுத்த படியாக சொல்ல வேண்டுமானால் மார்லன் பிராண்டோவைச் சொல்லலாம். இவர் முதலில் வில்லனாக அறிமுகமானார். பின் நகைச்சுவை நடிப்பிலும் தன் திறமையை வெளிப்படுத்தினார். ஆஸ்கார் விருதும் பெற்றார்.

"சொல்லுங்க சார்."

"ஸ்பீட் ரொம்ப ஜாஸ்தி. இது தேவையில்லை. என்னை முழுக்கப் பேசவிடறதேயில்லை நீங்க. ஒரு இடம் தொட்டவுடனே மடமடன்னு கம்ப்யூட்டர் கணக்கா போயிடறீங்க. போலாம். தப்பில்லை. எதிராளியைப் பேசவிட்டு அப்புறம் உங்க நேரம் வரபோது பேசுங்க."

"சரி சார். ஸீன் சொல்லுங்க."

சொன்னார். சொன்ன பிறகு கருத்து கேட்டார்.

அந்த ஸீன் ஆரம்பித்த விதம் பிடித்திருந்தது. முடித்த விதம் உறுத்தியது.

சொன்னேன்.

"பார்த்தீங்களா... கரெக்ட்டுன்னு கத்தினீங்களே... இப்ப இது திசைமாறி இருக்கறது புரியுதா."

"புரியுது சார்." நான் ஸீனைத் தொடர்ந்து சிந்திக்க தள்ளிப் போனேன்.

அன்று போகும் முன் என்னைத் தேடி கை குலுக்கிவிட்டு முகத்தை உற்றுப் பார்த்து விட்டுப் போனார். அந்த விநாடி நேரத்தில் எனக்கு அவர் எண்ணம் புரிந்தது.

"புத்தி சொல்வது போல் எங்கோ உங்கள் மனதை மிதித்து விட்டேனா. ஆமெனில் மன்னிக்க." முகம் பேசியது. மறுநாள் நேரடியாய் வாய் வார்த்தையாகவும் சொல்லப்பட்டது.

"ஆமா... பாலகுமார் சார். என்னைப் பத்தி என்ன நினைக்கறீங்க. என்கிட்ட ஏதாவது குறை இருக்கா." ஒருநாள் கேட்டார்.

நான் சொன்னேன்.

# 4

'என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்.' என்று யாரேனும் கேட்டால் அதற்குப் பதில் சொல்வது சரியா... தவறா.

தயங்காமல் பதில் சொல்வதுதான் சரி என்பது என் வாதம்.

மற்றவரைப் பற்றி முழுவதும் புரிந்து கொண்டு அவருக்கு விளக்கிச் சொல்லும்படியான அறிவு ஒருவருக்கு உண்டா.

இருக்கலாம்; இல்லாது போகலாம். ஆனால் கேட்டவுடன் பதில் சொல்லிவிடுவது நல்லது என்பது என் அபிப்பிராயம்.

நமக்குப் பதில் சொல்லத் தகுதியிருக்கிறதா என்று யோசிப்பதைவிட, தவறாக அவரைப் பற்றி அபிப்பிராயம் சொல்லி விடப் போகிறோமே என்று கவலைப்பட்டு அடக்கிக் கொள்வதை விட, கேட்டவுடன், 'நீ இப்படி, இவ்விதம்.' என்று பதில் சொல்வது உத்தமம் என்பது என் எண்ணம். காரணம், ஒருநாளும் மற்றவரைத் துல்லியமாக எடை போட்டுக் காட்ட இன்னொருவரால் முடியாது. அதே சமயம் நம்மை அபிப்பிராயம் கேட்பதற்கு கர்வப்பட்டு விடவும் கூடாது.அந்த நேரம் அந்த மனிதர் பற்றி மனதில் என்னவித எண்ண அலைகள் ஓடுகிறது என்று உற்றுக் கவனிக்க, இதுவரை அவர் பழகி வந்ததால் உள்ளே ஏற்பட்டிருக்கும் ஒரு அபிப்பிராயக் கட்டுமானம் இயல்பாய் வெளியே வந்து விடும்.


அப்படி அதை வெளியே கொண்டு வந்து வார்த்தையாக்கிப் போடுவதுதான் மிகப் பெரிய தர்மகாரியம் என்பது என் கருத்து.

எதிரே கேள்வி கேட்டவருக்கு என்ன பிடிக்குமோ அந்த விதமாய் பேசும் தந்திரசாலிகள் பலர் உண்டு. அவரால் அபிப்பிராயம் கேட்டவர்களுக்கு தீங்கு நேரலாம். மிகக் கூடுதலான புகழ்ச்சி வார்த்தைகளைக்

கவனமாய் சேர்த்து வீசி அபிப்பிராயம் கேட்டவரை திக்குமுக்காட வைக்கலாம். வார்த்தைகளில் தேன் தடவி திகட்டத் திகட்ட உண்ணக் கொடுக்கலாம். உண்மை ருசியற்றது. அதில் கசப்போ, இனிப்போ இல்லை.

என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய் என்று கேட்ட நேரத்தில் உள்ளே தோன்றும் உணர்வலைகளைக் கவனித்து இப்படி நினைக்கிறேன் என்று சொல்வதே கேட்டவர்க்கு உதவி. நட்புக்குத் தரும் மரியாதை.

ரஜினிகாந்த் கேட்டதும் நான் ஒரு நிமிட நேரம் மௌனமாய் இருந்தேன். பதினேழு பதினெட்டு வருட தொடர்பை, உள்ளே உள்ள கம்ப்யூட்டர் வெகுவேகமாய் திரட்டி ஒரு தகவல், ஒரு அபிப்பிராயம் தந்தது. அந்த



அபிப்பிராயம் ஒரு உணர்வாக இருந்தது. இனி வார்த்தைகள் ஆக்க வேண்டும்.

நான் தொண்டையைச் செருமிக் கொண்டேன்.

"அருள் மிகுந்த வாழ்க்கை உங்களுடையது. என்பதாய்த்தான் தோன்றுகிறது. உற்று உற்று பல நேரம் உங்கள் முகத்தை - கை - கால் அமைப்பை - அவைகள் நகரும் விதங்களை, நீங்கள் நடப்பதை, நிற்பதை, அமர்வதை, சட்டென்று மற்றவர் வருகைக்கு, சிரிப்புக்கு எதிரொலிப்பதைப் பார்த்திருக்கிறேன்.

அருள் நிறைந்த அமைப்பு நீங்கள். முகத்தில் அழகு தாண்டி ஒரு சுகம் இருக்கிறது. அதாவது உங்கள் முகத்தைப் பார்க்கும்போது ஒரு சுகம் ஏற்படுகிறது.

நீங்கள் ரொம்ப திடசாலியான - ஆஜானுபாகு வான மனிதர் இல்லை. உங்கள் தசை அமைப்பு, கட்டு மஸ்தான விஷயம் இல்லை. ஆனாலும் உங்கள் அசைவு முழுவதிலும் ஒரு துடிப்பு தெரிகிறது. அந்தத் துடிப்பில் ஒரு ஒயில் இருக்கிறது. அந்த ஒயிலான துடிப்புதான் எல்லோரையும் கவர்கிறது."

"பாலா சார்... நான் என்ன கேட்கறேன்... நீங்க என்ன சொல்றீங்க."

"மனசுல பட்டதைச் சொல்றேன். நீங்க கேட்டதால சொல்றேன்."

"சரி... நீங்க பேசுங்க" ரஜினி என்னை விஷயத்துக்கு நகர்த்தினார்.

"உங்கள் செயல்கள், உங்கள் தீர்மானங்கள் இதனால் கிடைக்கும் வெற்றிகள் உங்களால், உங்கள் முயற்சியால் கிடைப்பதை விட, வேறு ஏதோ ஒரு சக்தியால் கிடைக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் மிகக் கவனமாய் - அற்புதமாய் ஆட்டி வைக்கப்படுகிறீர்கள். பிரபல்யம் நோக்கி படிப்படியாய் நகர்த்தப்பட்டிருக்கிறீர்கள். இது உங்களுக்கு உள்மனதில் தெரிந்தும் இருக்கிறது.

எனவேதான் உங்களிடம் ஆட்டமும் இல்லை. உங்கள் பிரபல்யம் குறித்து உங்களிடம் பெரிய அலட்டலும் இல்லை.

ரஜினிகாந்த் இப்படி எல்லாரிடமும் இனிமையாய் இருக்கிறாரே; சகஜமாய் பழகுகிறாரே; பந்தா இல்லையே... இந்தப் பணிவு பொய்யா, நடிப்பா. நான் உற்று கவனித்திருக்கிறேன். மிகமிக இயல்பான பணியில் இருக்கிறீர்கள்.

'கொஞ்ச நேரம் தொடர்ந்து கம்பீரமான பந்தா அலட்டல் பண்ணுங்க' என்றால் உங்களால் முடியாது. அல்லது தப்புத் தப்பாய் பந்தா பண்ணுவீர்கள். பிடிக்காது செய்யும் செயலைப் போல அது இருக்கும்.

இந்தப் பணிவும் இறையருள்.

என் வெற்றி என்னைத் தாக்கி தாழ்வு செய்யாதிருக்கட்டும் என்று எவரிடமோ கைகூப்பி வரம் வாங்கி வந்திருக்கிறீர்கள்.


வெற்றி என்பது ஆலகால விஷம். அதை விழுங்கிய எவரையும் அது ஆட வைக்கும். அதிகம் அதிர வைக்கும். அதை விழுங்கித்தான் ஆகவேண்டும். அதே சமயம் அது குடலுக்கும் போய்விடக்கூடாது. அது விழுங்கப்பட்டு தொண்டையிலேயே நிறுத்தப்படுவது தான் சிறப்பு. நிறுத்தப்பட்டு விட்டது உங்களுக்கு.

அதனால்தான் யூனிட்டில் வருகிற சாப்பாடே போதும் என்று சொல்ல முடிகிறது; அதை ரசித்துச் சாப்பிட முடிகிறது.

சாதாரண அம்பாஸிடர்காரில் போக மனம் ஒப்புக் கொள்கிறது. நேற்று ஜெயித்தவர்கள் எல்லாம். காண்டசாவில் ஊரைக் கலக்கிக் கொண்டிருக்க, தன் செல்வத்தைப் பறையறிவிக்கிற எண்ணமே இல்லாது நகர முடிகிறது.

இறையருளால் வெற்றியும், அந்த வெற்றியினோடு பணிவும் இருப்பதால்தான் இன்றைய வேலைகளில் தெளிவு இருக்கிறது.

உங்கள் சினிமாவுக்கு என்ன வேண்டும். ரஜினிகாந்த் திரைப்படத்திற்கு எது எது முக்கியம் என்பதைத் தீர்மானிக்க முடிகிறது. அப்படி தீர்மானிக்க



காணாமலே காதல், என்ற இலக்கிய கால காதலைப் போல திரைக்கதை அமைத்து, அதை திறம் படமாக்கி வெற்றி வாகை சூடிக் கொண்டவர் இயக்குநர் அகத்தியன். இப்படத்திற்கு முன்னும் பின்னும் அகத்தியன் பல படங்கள் இயக்கியிருந்த போதிலும், அகத்தியனை இன்றும் நினைக்க வைக்கும் படம் காதல் கோட்டை.

எல்லோரையும் அணுகி அபிப்பிராயம் கேட்க முடிகிறது. நீங்கள் ஏற்றுக் கொள்ள முடியாத அபிப்பிராயம் சொன்னாலும் அதை அமைதியாய் செவிமடுக்க உங்களால் இயலுகிறது.

இதோ இப்போது என்னைக் கேட்கிறீர்களே, என்னைப் பற்றி என்ன அபிப்பிராயம் என்று. இது பெரிய விஷயம்.

நீங்கள் கேட்காமலேயே உங்களைப் புகழ்ச்சியில் குளிப்பாட்ட ஆட்கள் இருக்கிறார்கள். குளிப்பாட்டு கிறார்கள்.

'எனக்கு கொஞ்சம் புகழ்ச்சி தேவைப்படுகிறது. கொடு' என்றா இப்போது கேட்டீர்கள். இல்லையே. உண்மை பேசு என்றீர்கள்.

இவ்வளவு அருளும், அருளால் பணிவும் பெற்ற ரஜினிகாந்த் நடிகர்தானா.. நடிகர் மட்டும்தானா.

தன்னைச் சார்ந்த உலகத்திற்கு நடிகர் ரஜினிகாந்த் செய்தது போதுமோ... தலைவனாய் ஏற்று இருக்கிறார்கள். நீங்கள்வழிகாட்டியிருக்கிறீர்களா.

இறைவன் கொடுத்த வரத்தை நீங்கள் முழுமையாய் பயன்படுத்தினீர்களா.

இல்லை என்பது என் அபிப்பிராயம்."

## 5

"சினிமா உலகில் மட்டுமல்ல; வெளியேயும் வாழ்க்கையில் சிறப்புற்ற மனிதர்களை நான் உற்று உற்றுப் பார்த்து வருகிறேன். எந்த எதிர்பார்ப்புமின்றி, எந்தவிதமான லாபநோக்கமுமின்றி, எந்த அம்சம் அவர்களை உயர்வு பெற வைத்தது என்று கவனித்து வருகிறேன். அங்க லட்சணங்களை, அசைவுகளை அவர்களுக்குத் தெரியாமல் கவனித்து வருகிறேன். இது.. நான் மனிதர்களைநேசிப்பதில் ஒருவகை, அவர்களை அறிந்து கொள்வதில் ஒருவகை ஆர்வம். இப்படி கவனிப்பதில் வேண்டியவர், வேண்டாதவர் இல்லை; போட்டி பொறாமைகள் இல்லை.

அப்படி கவனித்ததில் உங்கள் அளவுக்கு இறையருள் பெற்ற குடும்பஸ்தர் எவருமில்லை. கடும் யோகப் பயிற்சிக்கும், பிரம்மச்சர்யத்திற்கும் பிறகு வரும்

சுடரொளி உங்கள் முகத்திலிருக்கிறது. இல்வாழ்க்கையில் ஈடுபடாது இறைவனை அடைவது மட்டுமே குறிக்கோளாக உள்ளவர்களுக்குத்தான் கண்களில் இத்தனை கூர்மையும் கவர்ச்சியும் இருக்கும். சிரிக்கும் பொழுது அதீதமான அழகு மலரும். உங்கள் மேனி நல்ல நிறமில்லை. எழுதி வைத்த சித்திரம் போன்ற அழகானவரில்லை. உள்ளுக்குள்ளே ஊறும் ஒரு யோக சக்திதான் உங்கள் முகத்தில் அழகாய் வந்து தங்கியிருக்கிறது. அதுதான் எல்லோரையும் ஈர்க்கிறது. நீங்கள் அழகானவர் அல்லர்; அமைதியானவர். அந்த அமைதிதான் உங்கள் அழகு.

இது முகஸ்துதியில்லை. மறுபடி சொல்கிறேன். ரஜினிகாந்தை முகஸ்துதி செய்து ஆக வேண்டியது ஒன்றுமில்லை. ரஜினிகாந்த் அழைக்காமல் அவர் அருகே வரமாட்டேன். ஆதாயம் தேடி சுற்றமாட்டேன்.

இப்படி உங்களுக்குள்ளே இருக்கின்ற ஒன்றை நீங்கள் வளர்க்கவே இல்லையே. இதைப் பிறரும் வளர்க்கத் தூண்டும்விதமாய்ப் பேசியதும் இல்லையே. இதுபற்றி முன்னமே ஒருமுறை கேட்டேன். எந்தப் பயிற்சியும் செய்வதில்லை என்று சொன்னீர்கள். இதுபற்றிப் பிறர் சொல்வதைக் கேட்டுக் கொள்வதோடு சரி. எந்த யோகப் பயிற்சியும் ஒழுங்காய், முறையாய்ச் செய்வதில் அக்கறையில்லை என்று சொன்னீர்கள். ஒரு விஷயத்தின் அடிவேர்வரை பார்ப்பது அவசியமில்லாதது என்று சொன்னீர்கள். தீவிரமாய் எதிலும் ஈடுபடுவது சரியல்ல என்பதாகவும் பேசினீர்கள். இப்போது அவ்விதமாகவே இருக்கிறீர்கள் என்பது தெரிகிறது. சினிமா மட்டும்தான் தீவிரமா. நீங்கள் எது சொன்னாலும் கேட்பதற்குப் பல லட்சக்கணக்கானவர்கள் இருக்க, பிராணாயாமம் பற்றியோ, ஹடயோகப் பயிற்சி பற்றியோ வாய் திறந்து ஒருநாள் பேசினால் தமிழ்நாட்டில் பத்தில் ஒருவராவது அதில் ஈடுபட மாட்டார்களா. நூறில் ஒருவராவது அதைப் பிறருக்குச் சொல்லிக் கொடுக்கும் அளவுக்குத் தேர்ச்சியுற மாட்டார்களா. ஆயிரத்தில் ஒருவராவது யோகப் பயிற்சியின் உன்னதம் பார்க்க மாட்டார்களா. தமிழ்நாட்டில் மன ஆரோக்கியமும், மத ஆரோக்கியமும் வளராதா."

இங்கே நான் எழுதியது கொஞ்சம். பேசியது

அதிகம்.

'என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.' என்று எவராவது கேட்க,

"உங்களைப் போல எவராவது உண்டா. நீங்க தெய்வம் சார். தெய்வம்" என்று உரத்த குரலில் கூவி, கைகூப்புவதை விட்டுவிட்டு, உபதேசம் போலவும், இடித்துரைத்தல் போலவும் பேசுவது அறியாமை, சிலசமயம் தன்தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்ளும் காரியம் போல் இது மாறும். ஆனால் நேர்மையானவர்கள் ரஜினிகாந்தைக்,கண்டு அச்சப்பட தேவையில்லை. வருந்துகிற வண்ணம் உண்மையைச் சொன்னால் அவர் கோபிப்பதில்லை. 'பாட்ஷா'வில் ஒரு வசனம் வரும். "முகஸ்துதி செய்தா எனக்குப் பிடிக்காது. குறையிருந்தா முகத்துக்கு நேரா சொல்லுங்க. பாராட்டறதா இருந்தா அதை முதுகுக்குப் பின்னாடி செய்யுங்க." இது பாத்திரத்துக்காக எழுதப்பட்ட வசனம் அல்ல; ரஜினிகாந்தை நினைத்து சொல்லப்பட்ட வசனம்.

"ஜால்ரா அடிச்சே கொன்னுடுவீங்கப்பா" ஜனகராஜ் பேசும் வசனமும் அங்கே வரும். அந்த வசனம் ரஜினியின் வாக்கியம். வேறொரு சமயத்தில் அவர் வாயிலிருந்தே வந்த விஷயம்.

சட்டென்று யாரைப் பற்றியும் அபிப்பிராயம் சொல்லாதவர் ரஜினிகாந்த். யாரிடமும் அபிப்பிராயம் கேட்காதவர் ரஜினிகாந்த். ஆனால் அபிப்பிராயம் சொல்லும்போது அவை முழு வேகத்துடன் வந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். நல்லதோ, கெட்டதோ தயக்கமின்றி அவர் வாயிலிருந்து வார்த்தை வந்திருக்கிறது. ஒரு சந்தர்ப்பம் வந்தபோது மேக்-அப்மேன் சுந்தரமூர்த்தியை, 'கடின உழைப்பாளி திறமையான தொழிலாளி, தன்வேலையைத் திறம்படச் செய்து விட்டு, ஒரு பாராட்டுக்கூட எதிர்பார்க்காமல் அமைதியாய்ப் போய்விடுகிற மனுஷன்' என்று என்னிடம் பலவிதமாய் பாராட்டினார். எனக்கும் மேக்-அப்மேன் சுந்தரமூர்த்திக்கும் நீண்டகால நட்பு உண்டு என்பதைப் புரிந்துகொண்டு, தான் சொன்ன பாராட்டுக்கள் சுந்தரமூர்த்தியிடம் போய்ச் சேர வேண்டும் என்பதற்காகவும் சொல்லியிருக்கலாம். இந்தப் பாராட்டுக்களை நான் சுந்தரமூர்த்தியிடம்

சொன்னபோது, ரஜினி இருந்த திசையை நோக்கி. சுந்தரமூர்த்தி கும்பிட்டார். ஆனால் அத்தோடு முடியவில்லை. மூன்றாம் மனிதர் மூலம் மட்டுமே ரஜினி பாராட்டுவதில்லை. 'பாட்ஷா'வில் வரும் 'அழகு... அழகு.'

என்ற பாட்டு பிரிவ்யூ தியேட்டரில் பார்த்தபோது, பாட்டு படமாக்கிய விதம் குறித்து டைரக்டர் சுரேஷ் கிருஷ்ணாவைப் பாராட்டியதோடு மட்டுமல்லாது, மேக்-அப்மேன் சுந்தரமூர்த்தியைத் தேடிப் போய் அந்தப் பாட்டில் அவர் செய்த வேலைக்காக கைகுலுக்கிப் பாராட்டியதும்- கண்கொள்ளாத காட்சி. அதே சமயம், சில பேரை மிக ஆபத்தான மனிதர்கள் என்று அவர் வர்ணித்ததையும் என் காதால் கேட்டிருக்கிறேன் ஆனால் இவர்கள் யாரும் ரஜினிகாந்தை முகத்திற்கு நேரே விமர்சித்திருக்கிறார்களா என்று தெரியாது. குறை சொல்வார்களா என்று தெரியாது. நான் குறை சொன்னதும் ரஜினிகாந்த் முகம் வாடியது. "டைரக்டர் கே.பாலசந்தருக்கு அப்புறம் என்னைத் திட்டிய ஒரே ஆள் நீங்கதான். இதுக்கு நான் நாளை பதில் சொல்கிறேன்" என்று எழுந்து போய் விட்டார்.

போனவர் சட்டென்று திரும்பி வந்து, "சரியா பதில் சொல்லணும்னுதான் போறேன். மத்தபடி வருத்தமேயில்லை" என்று மிக கவனமாகக் குறிப்பிட்டு விட்டுப் போனார்.

மறுநாள் பேசத் துவங்கினார்.

"பாட்ஷான்னு ஒரு படம் ஆரம்பிச்சுட்டோம். அமைச்சர் ஆர்.எம்.வீ. சாருக்கு எப்பவோ பிராமிஸ் பண்ணி இப்ப ஒரு படம் ஆரம்பிச்சுட்டோம். எனக்குப் பிடிச்ச சுரேஷ் கிருஷ்ணா டைரக்ஷன். பிரசாத் கேமிரா மேன். நீங்க வசனம். மகி ஆர்ட், தேவா மியூசிக். அப்படியே ஒரு டீம் பார்ம் ஆயிடுச்சு. இந்தப் படம் ஆரம்பிச்சு இருபத்திநாலு மணீ நேரமும் எனக்கு இந்தப் படம் பத்திதான் சிந்தனை. ஜெயிச்சா ரஜினி படம் ஜெயிச்சுச்சுன்னு சொல்லுவாங்க. தோத்தா ரஜினி படம் தோத்ததுன்னு சொல்லுவாங்க. ஆகவே இங்க எல்லா இடத்திலேயும் எனக்கு பொறுப்பு ஜாஸ்தி. தேவாவுக்குத் தெரியாத மியூசிக்கையா நான் சொல்லிடப் போறேன். சுரேஷ்கிருஷ்ணாவுக்குத் தெரியாத ஸ்கிரீன்ப்ளேயா நான் செய்திடப் போறேன். நான் வந்து நின்று பேசி

அக்கறை காட்டினால் இன்னும் ஆவேசமா உழைப்பாங்க. இன்னும் உற்சாகமா வேலை செய்வாங்க.

ரஜினிகாந்த் படத்துக்கு என்ன வேணுங்கறதை விட, என்ன வேணாங்கறதுதான் முக்கியம். சினிமா பலவகை. அதுல ரஜினிகாந்த் ஒருவகை. நான் பண்ற சினிமாதான் சரியான சினிமான்னு நான் சொல்லமாட்டேன். அதே சமயம் காக்கைக்கு தன் குஞ்சு பொன்குஞ்சு. என் சினிமா எனக்கு உசத்தி. அது எந்த சினிமாவை விடவும் மட்டமில்லை. வேற யாருடைய தயாரிப்புக்கும் கீழானதில்லை. நான் இப்போ நினைக்கிறாப்போல, தான் சொல்ற சினிமாக்கதை உசத்தின்னு நினைக்கறதுக்கு எல்லாருக்கும் உரிமை உண்டு. அப்படி காம்ப்ரமைஸ் பண்ணாத நல்ல சினிமா எடுக்கறவரை நான் மதிக்கிறேன்.


ஆனால் ரஜினிகாந்த் சினிமா ரசிகர்களுக்காக இது வேறு பார்முலா. இந்தப் படம் முடியும் வரையில் எனக்குள் இந்த பார்முலாதான் ஓடும். ஒவ்வொரு நாள் ஷூட்டிங்கும் சரியா, சரியா என்று எடை போடும். இனி அடுத்து என்ன என்பதை யோசிக்கும். என்னை நம்பிப் பணம் போட்டவர் வெற்றி பெற்றே ஆக வேண்டிய பொறுப்பும் என்னிடமிருக்கிறது. ஒரு படம் ஆரம்பித்து எட்டு ஒன்பது மாதங்கள் இந்த சிந்தனையாகவே போய் விடும்.

படம் வெளியீட்டுத் தேதியை நெருங்க, நெருங்க இந்தப் பதட்டம் மிகப் பெரிதாகும். படம் வெளிவந்து இந்தப் பதட்டம் நீங்கவே ஒரு மாதமாகும். இன்னும் இரண்டு மாதங்கள் எதுவுமே நினைக்காது ஓய்வெடுத்தால்தான் அடுத்த படத்துக்கு ஆயத்தமாக முடியும். இந்தப் போராட்டத்திற்கிடையில் நான் என்ன பிராணாயாமம், என்ன ஹடயோகம் செய்ய, செய்யும் மனநிலை எனக்கு எங்கிருந்து வரும்.

அதே சமயம் செய்ய வேண்டிய விஷயத்தைச் செய்யாமலிருக்கிறாயே என்று நீங்கள் குத்துவதும் புரிகிறது. எனக்கு ஒரு திட்டமிருக்கிறது. இறைவன் எனக்கு கொடுத்த சக்தியை வளர்த்துக் கொள்ளும் எண்ணமும் இருக்கிறது"

ரஜினிகாந்த் நிதானமாய் விவரிக்கத் துவங்கினார்...

## சினித் துளி



தமிழ்த் திரைப்பட வரலாற்றில் திருப்புமுனை ஏற்படுத்திய படம் 'ஒரு தலை ராகம்'. கதாநாயகிக்கு பாடல் கொடுக்கப்படாமல், கதாநாயகன் மட்டும் ஒரு தலையாய் பாடுவதாக கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இசை என்று தனது தொழில் நுட்பத் திறமைகளை சிறப்பாய் வெளிப்படுத்தி ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர், அஷ்டாவதானி டி.ராஜேந்தர்.

## 6

"நகரத்துலேர்ந்து கொஞ்சம தள்ளிப் போயிடணும். மனசுக்குப் புடிச்ச இடமா பார்த்து கொஞ்சம் நிலம் வாங்கணும். ஐநூறு மாடுகள் வளர்க்க, மேய்க்கத் தகுந்த இடமா வாங்கணும். அதாவது பால்பண்ணை. கொஞ்சம் தள்ளி பெரிசா ஒரு தோப்பு ஏற்படுத்தணும். குரங்குகளை அங்கு குடியேற வைக்கணும். கொஞ்சம் தொலைவா நின்னுகிட்டு அந்த குரங்குக்களை வேடிக்கை பார்க்கணும். பிறகு மாடுகள் மேய்ச்சு, சுத்தம் பண்ணி, பால் கறந்து அப்படி வேலை செய்யணும்.

அந்தப் பண்ணைக்கு நடுவுல, இரண்டு ரூம் மூனு ரூம் இருக்கற வீடு கட்டிக்கிட்டு, நாம நடிச்ச படத்தை நாம போட்டு பார்த்துகிட்டு, உப்ப காமிரா பின்னால யார் இருந்தாங்க, என்ன நடந்தது, எப்படி அந்த படத்து கதை உருவாச்சுன்னு ரீ-கலெக்ட் பண்ணி உட்கார்ந்திருக்கணும்.

இப்படி ஒரு ஆசை என் மனசுல உண்டு.

இந்த வேலைகளுக்கு நடுவே தினமும நேரம் கிடைக்கறப்ப 'ஓம்'ங்கற சப்தத்துல மனசு லயிக்க வைக்கணும்.

எங்க வீட்ல பார்த்திருப்பீங்க. எப்பவும் ஓம்னு ஒரு

ஒலி வர்ற மாதிரி ஒரு கேஸட் ஏற்பாடு பண்ணி, டேப் ரிக்கார்டர்ல போட்டு கேட்டுக்கிட்டு இருப்பேன். தியானம் பண்ற நேரத்தை அதிகமாக்கி, அந்த ஓம்கார ஒலியிலே மனச நிக்க வைக்கணும். விழிச்சு கண்ணு திறந்த உடனே மறுபடி மாடு, குரங்குன்னு வேல செய்ய வேடிக்கை பார்க்கப் போயிடணும்."

"மாடு -பால் பண்ணை புரியுது. எதுக்கு குரங்குகளுக்குன்னு தோப்பு வளர்த்து வேடிக்கை பார்க்கற விஷயம்."

"ரொம்ப வேகமா சலனமாகிற மனசு குரங்கு. அதிகம் சலனமில்லாத, அதே சமயம் அப்படியே கல்லா நிக்கற மனசு பசு. இது இரண்டும் எனக்குள்ள இருக்கு.

குரங்கை வேடிக்கை பார்க்கணும். பசுவோட பழகணும்..

குரங்கை வேடிக்கை பார்க்க வேடிக்கை பார்க்க, என் மனசு அதைவிட எவ்வளவோ மோசமா - தேவையில்லாது ஆடுதுன்னு புரியுது.. குரங்கு குதி போடறதை, ஆடறதை சேஷ்டைன்னு சொல்றோம். அப்போ அதை விட அதிகமா ஆடற என் மனசை என்னான்னு சொல்றது.

ரோட்ல ஒரு ஆள் குடிச்சுட்டு விழுந்து கிடக்கான்னு வெச்சுக்குங்க. அதைப் பார்க்கறப்போ, இந்த முட்டாள்தனம் செய்யவே கூடாதுன்னு தோணுதில்ல. அதே மாதிரி குரங்கு ஒரு இடத்துல உட்கார்ந்து அலைஞ்சுக்கிட்டே இருக்கறத பார்க்கற போது அலையற மனசை கண்ட்ரோல் பண்ற எண்ணம் வரும். அதாவது குரங்கை உத்துக் கவனிக்கற மாதிரி அலையற மனசை, குதி போடற மனசை, உத்துக் கவனிக்க ஆரம்பிச்சுருவோம்.

நம்ம மனசை நாமே உத்துப் பார்க்கறப்போ அது கொஞ்சம் கொஞ்சமா ஒரு நிதானத்துக்கு வந்துரும்.

இதுதான் என் எதிர்காலத் திட்டம். இது யோக சாதனையா. இல்லே, வெறும் விஷயமா, தெரியாது.

ஆனா இப்படி ஒரு அமைதியான வாழ்க்கை வாழணும்னு மனசுல ஒரு திட்டம், ஆசை இருக்கு. இந்த மாதிரி விஷயங்களுக்கு வாத்தியாரா ஒருத்தர்கிட்ட போகாது யாரையும் போய் இது என்ன, இது எப்படின்னு

விசாரிக்காது, மனசுல பட்டதை மனசுல பட்ட விதமே நடத்திவிட்டுப் போறது நல்லதுன்னு தோணுது.

பாடம்னு கேட்கப்போனா பத்துவிதமான ஆட்கள் பத்து விதமான அபிப்பிராயத்தோட வராங்க.

இவரு தப்பு, அது சரி, இப்படி தப்பு, அப்படி சரிங்கறாங்க.

மனசுக்குத் தெரியும். கவனமா உத்து கேட்டா சரியான வழி மனசு காட்டும். மனசுதான் சரியான குரு.

மனசு குருன்னு ஏத்துக்கிட்ட பிறகு அடடா அவரு அப்படி செய்யறாரே. இது நல்ல மெத்தேடா தெரியுதேன்னு ஜகாவாங்கக் கூடாது.

சரியோ தவறோ; நல்லதோ கெட்டதோ மனசு சொல்ற வழில போகணும்.

இந்த மனசு குருன்னு வெச்சுக்கறபோது ரொம்ப பிடிவாதமும் தேவையில்லை. கடவுளைப்பார்த்துட்டு தான் மறுவேலைன்னு ராப்பகலா வெறி புடிச்சா மாதிரி மாறிடக்கூடாது.

கடவுளை, பார்க்க முடிஞ்சபோது பார்க்கலாம்ன்னு நிதானமா இருக்கணும். அதே சமயம் நிதானம் சோம்பலாயிடக்கூடாது. ஒரு மென்டல் பேலன்ஸ் வேணும்.

இதை ரஜனீஷ் படிச்சு தெரிஞ்சுக்கிட்டேன். அப்பப்ப புனால இருக்கற ஆஸ்ரமம் போவேன். நல்ல சிநேகிதர்கள் அங்கே இருக்காங்க. அங்க போய் ஆறு நாள் ஏழுநாள் எல்லாம் மறந்துட்டு இருப்பேன். ஒரு புது உணர்வோட நிறைவோட திரும்பி வருவேன்.

பகவான் ரஜனீஷ் ஒரு முழுமையான குரு. திறந்த மனசோட அவரைப் படிச்சா பல விஷயங்களை சரியான கோணத்துல புரிஞ்சுக்க முடியும். ரஜனீஷ் புரிஞ்சுக்கறதுக்கு முன்னே நமக்கு தெரிஞ்ச விஷயங்களிலேர்ந்து விடுபடணும். நாம நினைச்சுட்டு இருக்கற கடவுள், மதம், பூசாரி, ஆச்சாரம், பூஜை இதுலேர்ந்து விடுபடணும். இப்படி விடுபடறது எல்லாருக்கும் கஷ்டம். அதனால்தான் ரஜனீஷ் பத்தி நான் அதிகம் யார்கிட்டயும் பேசறதில்லை.

எங்க குருன்னு அவரை யார் கிட்டயும்

அறிமுகப்படுத்தறதில்லை.

ஆமா.. நான் ஒண்ணு கேட்கறேன், தப்பா நினைக்காதீங்க. தியானம், ஹடயோகம் இப்படி ஏதேதோ பேசறீங்க. ஆனா இவ்வளவு சிகரெட் பிடிக்கறீங்களே.. பாலகுமாரன், இது சரியா. சுத்திப் பாருங்க ஒண்ணு ரெண்டு மூணு நாலு பத்து பன்னிரெண்டு. அடேங்கப்பா ஒன்னவர்ல பன்னிரெண்டு கிங்சைஸ் சிகரெட்டா. ஜாஸ்தி இல்லே. அதே சமயம் இருமறதில்லையே நீங்க. அது எப்படி.''

ரஜினியின் நீண்ட விளக்கத்தின் கடைசியாய் என் முதுகில் ஒரு கேள்விக் குத்து விழுந்தது.

நான் சட்டென்று இருண்டேன்.

என் சிகரெட் பழக்கம் பலர் சுட்டிக் காட்டி இடித்துரைத்த விஷயம்தான். ஆனால் ஒன்று, பதிலுக்கு பதில் என்பது போல் தியானம் பற்றி பேசுகிற நீ என்ன யோக்கியதையில் சிகரெட் பழக்கம் தொடருகிறாய். ஏன் மனக் கட்டுப்பாடு இல்லை. இது தீயது என்று தெரிந்தும் ஏன் விட முடியவில்லை. என்று சொல்லாது சொல்லப்பட்டது.

முதன் முறையாய் என்னைச் சுற்றி நான் போட்ட சிகரெட் துண்டுகள் அசிங்கமாகத் தெரிந்தது எனக்கு. ரஜினிகாந்த் என் சிகரெட் பழக்கம் கேட்டு விட்டு, சாதாரணமாய் படப்பிடிப்புக்கு எழுந்து போய் விட்டார்.

நான் தொடர்ந்து புகைபிடித்தபடி யோசித்தேன்.

இதை விட முடியாதா. இந்த கொடிய பழக்கத்திலிருந்து என்னால் நகர முடியாதா. என் மனம் இதற்குப் பக்குவப்படவில்லையா. ஆமெனில் என் தியானத்திற்கு - அது தொடர்பான பேச்சுக்கு என்ன மதிப்பு.

அன்று இரவும் சிகரெட் பிடித்தேன். யோசித்தேன்.

என் மனம் ஒரு அளவுக்கு பக்குவப்பட காரணமாய் இருந்த என் சத்குருநாதன் யோகிராம் சுரத்குமார் நோக்கி மனசுள் பேசினேன்.

சிகரெட் பழக்கம் விட விரும்புகின்றேன். உதவி செய்ய வேண்டும். தயவு செய்து இந்த கெட்ட பழக்கத்தை நிறுத்தும் வலிவு தர வேண்டும். கெஞ்சினேன்.

'ஆமா நீங்க ஏன் இவ்ளோ சிகரெட் பிடிக்கறீங்க.' ரஜினியின் கேள்வி காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

மனசு, சிகரெட் எடுக்கும் போதெல்லாம் பிரார்த்தனையை குரு நோக்கி செய்தது. நவம்பர் மாதம் முப்பதாம் தேதி இரவு ஒரு பாக்கெட் சிகரெட்டோடு உட்கார்ந்து, தொடர்ந்து ஒன்பது சிகரெட்டுகள் பிடித்து விட்டு, பாக்கெட்டை கசக்கிப் போட்டேன். இன்று வரை ஒரு சிகரெட்கூட பிடிக்கவில்லை.

எரிச்சல் இல்லாது, பல்கடித்து வேதனைப்படுத்தும் கொடூரம் இல்லாது, சிகரெட் பிடிக்கும் பழக்கம் என்னை விட்டு அகன்று விட்டது.

இனி எந்தக் காரணம் கொண்டும் சிகரெட் பிடிக்க மாட்டேன் என்பது எனக்குள் உறுதியாகி விட்டது.

## 7

நல்லவர்கள் நல்ல விஷயங்கள், நல்ல படியாக நடக்க வேண்டுமென்றால் நிச்சயம் நடந்தே தீரும். பலபேர் சொல்லியும் நிறுத்த முடியாத என் புகை பிடிக்கும் பழக்கம் ரஜினிகாந்த் கவலைப்பட்ட மூன்று நாளில் நின்று போனதை நீங்கள் என்னவிதமாய் எடுத்துக் கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியாது. ரஜினிகாந்தின் நல்ல மனம்தான் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது.

கிட்டத்தட்ட பதினெட்டு வருடப் பழக்கம் அவரோடு எனக்கு உண்டு. எப்பொழுது சந்திக்க நேர்ந்தாலும் அவர் சிகரெட் நீட்ட, வாங்கி பற்ற வைத்துக் கொண்டு அதன் தொடர்ச்சியாய் என் சிகரெட்டுக்குத் தாவுவது உடனே அங்கு நடக்கும். அப்படி சந்தித்த போது கூட ஒருமுறைகூட ரஜினிகாந்த் சிகரெட் பிடிக்கும் பழக்கம் பற்றி கேட்டதேயில்லை.

எனக்குத் தெரிந்த சில திரையுலகப் பிரமுகர்கள் உபதேசம் செய்ய ஆரம்பித்தால் சீக்கிரத்தில் ஓயமாட்டார்கள். பிறர் அந்தரங்கம் அறிவதில் ஆவல் உள்ளவர்களாய், அவர்கள் வாயைக் கிண்டி வம்புக்கு இழுத்து, 'அவர் பலவீனங்களைப் பற்றி தெரிந்து கொண்டு, அவர் பலவீனங்களை நீக்குவது எப்படி என்று அவருக்கே அறிவுரை சொல்வார்கள்.

"குடிங்க, வேணாம்னு சொல்லலை. ஆனா ஜாக்கிரதை" என்று மிகக் கபடமாய் பேசுவார்கள். அதே சமயம் வெளியே போய் "அநதாளா, பெரிய குடிகாரன்." என்று வதந்தி பரப்புவார்கள். என்னிடமிருந்த ஒரே கெட்ட பழக்கமான சிகரெட் பற்றி சில பிரமுகர்கள் அதிகம் பேசி கவலைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் சிகரெட்டை விட கொடுமையான பழக்கங்கள் அவர்களுக்கு இருப்பதை நான் அறிவேன்.

நான் அறிய ரஜினிகாந்த் அறிவுரை சொல்வதேயில்லை. அதே சமயம் பிறருக்கு நல்ல வாழ்க்கை அமைவதிலும் அக்கறை இருக்கிறது.

டைரக்டர் ஷங்கருக்கு திருமணம் என்று நான் சொன்னதும் அப்படியா என்று மிகவும் சந்தோஷப்பட்டார்.

"யாரைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறார். சினிமாவிலிருக்கும் பெண்ணா."

"இல்லை. மணமகள் சினிமாவுக்கு சம்பந்தமில்லாதவர். டெல்லியில் பிறந்து வளர்ந்தவர்."

"நல்லது." - சட்டென்று கைகூப்பினார்.

"ஏன். சினிமாவிலிருக்கும் பெண்களைத் திருமணம் செய்வது பற்றி உங்களுக்கு வேறேதும் அபிப்பிராயம் இருக்கிறதா."

"தவறாக எந்த அபிப்பிராயமும் இல்லை. புருஷன் மனைவிக்கு நடுவே மூன்றாவது ஆள் நுழையக்கூடாது. சினிமாவில் நடிக்கும் பெண்களைத் திருமணம் செய்து கொண்டால் மூன்றாவது மனிதர் நுழைய வாய்ப்பிருக்கிறது. அவரைப் பற்றி பொய் சொல்லவோ, புறங்கூறவோ சில சமயம் ஆட்கள் முன் வரலாம். சினிமாவுக்கு அப்பால் உள்ள பெண்கள் எனில் இவை இருக்காது. வாய்ப்பு மிக மிக அரிது. வாழ்க்கையின் துவக்கம் பிரச்சினையே இல்லாது இருக்க வேண்டும் என்ற கவலையில் சொன்னேன்."

இதுதான் ரஜினிகாந்த்.

கனிந்த அக்கறை. கண்ணியமான விசாரணை. எங்கு கனிவான அக்கறை இருக்கிறதோ, இந்தக் கனிவான அக்கறை ஒரு மனிதனுக்கு இயல்பாக

இருக்கிறதோ, அப்போது ஒரு பிரச்சனையை அணுகவும் தெரிந்து விடுகிறது.

பாட்ஷா படப்பிடிப்பு முடியும் தருவாயில், ஒரு குறிப்பிட்ட நடிகைக்கு படக் கம்பெனி காசு தரவில்லை என்று தெரிந்தது. அன்று மாலைக்குள் தருவதாகப் பேச்சு. என்ன காரணமோ வரவில்லை. ஏன் பணம் வரவில்லை என்றதற்கு, தயாரிப்பு நிர்வாகிகளும் சரியாக பதில் சொல்ல முடியவில்லை. அந்த நடிகை மேக்கப் ரூமிலமர்ந்து செட்டுக்கு வர மறுத்துவிட்டார். செட்டில் முழு உடைகளுடன் ஐம்பதுக்கு மேற்பட்ட நடனப் பெண்களுடன் புகைக்கும், வெப்பத்துக்கும் நடுவே ரஜினிகாந்த் நடன அசைவுகளைப் பழகிக் கொண்டிருந்தார். நடிகை தளத்திற்கு வரமறுக்கும் செய்தி சொல்லப்பட்டது.

இனி நடிகை வந்தால்தான் அசைவுகள் பழக முடியும் என்கிற நிலை. கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் ரஜினிகாந்த் பொறுமையாக இருந்தார். தயாரிப்பு நிர்வாகிகள் தாமதத்துக்கான காரணங்கள் கூறி, படப்பிடிப்பு முடிவதற்குள் அன்று இரவுக்குள் பணம் வந்து விடும் என்று சொன்னார்கள். நடிகை நம்பவில்லை. நம்ப முடியாதபடி பயம். வேறு எவரோ செய்த சில்மிஷம். வேறு எந்த நடிகராக இருந்தாலும் இதுதான் சாக்கு என்று கிளம்பிப் போய் விடுவார்கள். எக்கேடாவது கெட்டுப் போங்கள் என்று நகர்ந்து விடுவார்கள் அல்லது விஷயத்தைப் பெரிதாக்குவார்கள்.

ரஜினிகாந்த், டைரக்டர் சுரேஷ்கிருஷ்ணாவோடு பேசினார். அன்றைய ஷூட்டிங் தடைபடுவதால் உண்டான நஷ்டத்தையும், படம் வெளிவருவது தாமதமாவதால் உண்டாகும் கஷ்டத்தையும் தெரிந்து கொண்டார். டைரக்டரை அழைத்துக் கொண்டு போய் அந்த நடிகையிடம் நேரே பேசினார். பத்தாவது நிமிடத்தில் நடிகை படப்பிடிப்பு தளத்திற்கு வந்துவிட, மிக வேகமாக படப்பிடிப்பு வேலை நடந்தது. வந்து ஆடத்துவங்கிய அரை மணி நேரத்தில் நடிகை கேட்ட காசும் வந்து விட்டது.

வேலை நேரத்தில் காசைக் கொடுத்து கவனத்தைக் கலைப்பானேன். வேலை முடிந்து போகும்போது தரலாம் என்றிருந்தோம். அதற்குள் நடிகை அவசரப்பட்டு

விட்டார் என்று தயாரிப்பு தரப்பில் வருத்தப்பட்டார்கள்.

இந்த சமாதானங்களை ரஜினிகாந்த் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. வேலை நிற்கவில்லை; நடக்கிறது. அதுதான் முக்கியம் என்று பரபரப்பாக இயங்கினார்.

ஷூட்டிங் முடிந்து டப்பிங் ஆரம்பமாயிற்று. ரஜினிகாந்த் டப்பிங் பேசும்போது தியேட்டருக்கு போயிருந்தேன். நான் சிகரெட் விட்டு கிட்டத்தட்ட பத்து நாளாகியிருந்தது. என்னைப் பார்த்து திரும்பியவர் வழக்கம் போல சிகரெட் பெட்டி திறந்து சிகரெட் நீட்டினார்.

"இல்லை, வேண்டாம்."

"ஏன். பிராண்ட் மாத்தினா இருமல் வருதா."

"அதில்லை காரணம். நான் சிகரெட் பிடிப்பதை நிறுத்தி விட்டேன்."

"என்ன..."

"பத்து நாளாயிற்று."

"நிஜமாகவா."

"ஒரு சிகரெட் கூடப் பிடிக்கவேயில்லை."

"பதட்டமாக இல்லையா."

"முதல் நாள் இருந்தது. இரண்டாம் நாள்... இருந்தது. மூன்றாம் நாள் இருந்தது. இப்போது சிகரெட் பிடிக்கும் எண்ணமே இல்லை."

"பொறாமையா இருக்கு பாலா சார். என்னால இதை விட முடியலை. ஏதாவது பிரச்சினை வந்து சிகரெட்டைத் தூக்கிப் போடுவாங்க. ஒரு பிரச்சினையும் இல்லாம எப்படி சிகரெட் நிறுத்த முடிஞ்சது."

"ஏன் இவ்வளவு சிகரெட் பிடிக்கறீங்கன்னு நீங்க கேட்டீங்க இல்லையா... ஷூட்டிங் நடக்கறப்ப. அது ரொம்ப வருத்தமா இருந்தது எனக்கு. நீங்க இவ்விதமெல்லாம் கேட்கக்கூடியவர் இல்லை. நீங்களே பொறுக்க முடியாது கேட்கும் அளவுக்கு நான் சிகரெட் பிடித்திருக்கிறேன்."

"அன்னைக்கு கொஞ்சம் டென்ஷனான சீன். நானும் டைரக்டரும் மாத்தி மாத்தி உங்கள்ள தொந்தரவு பண்ணிட்டிருந்தோம். அதனால உங்களுக்கு சிகரெட்

ஜாஸ்தியாயிடுச்சு, நிகோடின் ஃபில்டர் இல்லாம இவ்வளவு சிக்ரெட் பிடிக்கறீங்களே... இருமல் வந்துரப் போவுதேன்னு பயந்து போய் கேட்டேன். நான் கேட்டேன். நீங்க வுட்டுட்டீங்க. நீங்க ஏதாவது செய்து நான் சிகரெட் நிறுத்த முயற்சி பண்ணுங்களேன்."

நான் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். எங்கள் தோழர் ரஜினிகாந்த் நீண்ட ஆயுளும், நிரந்தரமான உடல் வலிவும், நிம்மதியான எண்ண ஓட்டங்களும், நிறைவான புகழும் கொண்டு வாழ்வதற்காக அவரிடம் உள்ள சிகரெட் பழக்கத்தை அவர் விட்டு விடுவதற்காக என் சத்குருநாதன் திருவண்ணாமலை மகான் யோகிராம்சுரத்குமார் அவர்களைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்.

நல்லவர்கள், நிறைவோடும் நீண்ட ஆயுளோடும் வாழ்வது நல்லது.

## 8

சூரியனோடு சில நாட்கள் என்று இந்த கட்டுரை எழுதும்போது டைரக்டர் சுரேஷ் கிருஷ்ணாவைப் பற்றி சொல்லாமல் இருக்க முடியாது.

ஒரு நடிகருடைய செல்வாக்கு எவ்வளவு உன்னதமாக இருந்தாலும், இயக்குனர் பலமாக இல்லையேல் திறமையான டெக்னீஷியனாகப் பரிமளிக்கவில்லையெனில் ஒரு திரைப்படம் சிறப்பான முறையில் வெளிவராது. சிறப்பான முறையில் திரைப்படம் வெளிவராவிட்டால் மிக உன்னதமான நடிகரின் நிலைகூட ஆட்டம் காணும். நல்ல டைரக்டர்களுக்காக நடிகர்கள் ஏங்குவது திரைப்பட நடிகர்களின் இயல்பு.

நாலுபேரிடம் வேலை வாங்கி கோர்ப்பதுதான் டைரக்டரின் வேலை என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தனக்கு வேண்டியதை மற்ற கலைஞர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளும் சாமர்த்தியம் மட்டும்போதும் என்று நினைக்கிறார்கள். ஐந்து டியூனில் எந்த டியூன் பிடிக்கிறது என்றால் இந்த ரெண்டு டியூன் என்று குழந்தைகூட சொல்லி விடும். அந்த ரெண்டு டியூனில் எது நல்ல டியூன் என்று சொல்ல சிறிதளவு புத்தி போதும்.

சங்கீதமாவது சினிமாப் பாடல்கள் மூலம் காதுக்குள் புகுந்த விஷயம். ஆனால் நடனம் இன்னும் கடினம். ஒரு படத்தின் வெற்றியை இன்றைய காலகட்டத்தில் நடனமும் சேர்ந்து தீர்மானிக்கிறது. சமீபத்தில் பல படங்களின் வெற்றிக்கு நடனம் தெரிந்த நடிகர்களின் திறமையே காரணமாக இருந்திருக்கிறது.

இன்றைய டைரக்டர்களிடையே சுரேஷ்கிருஷ்ணா வித்தியாசமானவர். அமைதியான திறமைசாலி. திரைக்கதையை பாட்ஷா படத்திற்காக உருவாக்கி ரஜினிகாந்த்தோடு விவாதித்து பிறகு என்னிடம் சொல்வார். நான் அந்தக் காட்சியை மனதில் வாங்கிக் கொண்டு வசனங்களாக்கி அவருக்குத் தருவேன். அது மறுபடி ரஜினிகாந்துக்கு போகும். எங்களையெல்லாம் விட மிக உயரத்தில் ரஜினிகாந்த் இருந்தாலும் திரையுலக சம்பிரதாயங்களை அவர் மீறுவதில்லை. டைரக்டரே படப்பிடிப்புத் தளத்தின் முதன்மையானவர் என்பதை அவர் மறுத்ததேயில்லை.

சுரேஷ்... சுரேஷ் என்று ஐந்து நிமிடத்துக்கொரு முறை அவர் பரபரப்பதே இதற்கு சாட்சி. டைரக்டர் என்ற மரியாதை மட்டுமல்லாது மிக சுகமான ஒரு வாஞ்சையும் அதில் இருக்கும்.

பாட்ஷா திரைப்படத்தில் மாணிக்பாட்ஷாவிற்கும் அவருடைய தகப்பனான விஜயகுமாருக்கும் எந்தவிதமான உறவு சரி என்பதில் விவாதம் வந்தது. சுமூகமான உறவா, ச்சீபோ... என்று சீறும் உறவா என்று தீர்மானிப்பதில் பிரச்சினை வந்தது.

“வளர்க்க வேண்டிய விதத்துல நீ வளர்த்திருந்தா இந்த மாணிக்கம் மாணிக்பாட்ஷாவாயிருக்க மாட்டான். திருடன்கிட்ட வேலைக்கு சேர்ந்தவனுக்கு, பெத்த புள்ளையபத்தி என்னா அக்கறை இருக்கும்... வீட்ல இருக்கற குழந்தைங்களுக்கு வயத்துக்கு சோறு போட்டா மட்டும் அவன் அப்பனாயிட முடியாது. அவங்க வாழ்க்கை நல்லபடியா அமையணும்னு யோசிக்கிறவன்தான் அப்பனாக முடியும். அன்பு காட்டறவன்தான் அதிகாரம் பண்ணலாம். நீ அப்பாங்கற ஒரே காரணத்துக்காக என்மேல அதிகாரம் காட்டற, இதை நான் ஒத்துக்க முடியாது...’ என்கிற விதமாய் காட்சி இருந்தது.

இந்தக் காட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் கொண்ட சுரேஷ் படப்பிடிப்பு நேரத்தில் 'எப்படி இருக்க வேண்டும் என்று தெரியவில்லை. ஆனால் நீங்கள் இப்போது சொன்னீர்களே... இப்படி இருக்கக்கூடாது...' என்று ரஜினிகாந்திடம் சொன்னார்.

எனக்கு இந்த வாதம் புரியவில்லை. என்ன வேண்டும் என்று சொன்னால் அதற்கேற்ற விதமாய் எழுதித் தரலாம். அல்லது பல்வேறு விதமாக யோசித்துப் பாருங்கள் என்றும் சொல்லலாம். சுரேஷ் சொல்வது சிக்கலான விஷயமாகத் தோன்றியது.


ரஜினிகாந்த் அவர்களுக்கு தந்தையைக் கடுமையாகக் குற்றஞ்சாட்டுவதே சரி என்று பட்டது. சுரேஷ் அதைத் தீவிரமாக மறுத்தார்.

உண்மையிலேயே மாணிக்கம் அப்பா கெட்டவரா இருந்தாகூட மாணிக்கம் அவரைக் கடுமையாகப் பேசமாட்டான். முதல் காரணம் விஜயகுமார் நிர்பந்தத்தால் கடத்தல் தொழிலில் ஈடுபட்டவர்... அதுவும் குடும்பத்திற்காக.

இரண்டாவது ரஜினிகாந்த் என்ற நடிகர் தகப்பனை எதிர்த்துப் பேசக்கூடாது. அது மோசமான முன்னுதாரணமாய் அமையும்.

மூன்றாவது மாணிக்பாட்ஷாவிற்கு வில்லன் மீது கோபமேயொழிய வில்லனிடம் வேலை செய்யும் தகப்பனிடம் எந்தக் கோபமும் இல்லை.

## சினித்துளி



இப்போது இருப்பது போல் படப்பிடிப்பிற்கு முன்பு பாடல்களை ஸ்டூடியோவில் ஒலிப்பதிவு செய்ய அந்தக் காலத்தில் தொழில் நுட்பக் கருவிகள் இல்லை. எனவே, பாடும் திறமை பெற்ற நாயகனோ, நாயகியோ படப்பிடிப்பின் போது உரக்க பாடுவார்கள்.

நான்காவது இரண்டு துருவங்களாக தந்தையும் மகனும் சந்திக்கும் போது இப்படி பிரிந்து விட்டோமே என்கிற வேதனைதான் இருக்குமே தவிர குற்றம் சாட்டல் இருக்காது.

என்ன விதமான நெகிழ்வு என்பதே என் கேள்வி என்று சுரேஷ்கிருஷ்ணா சொன்னார். படப்பிடிப்பு தளத்தில் அது வேகமான விவாதமாக வளர்ந்து விட்டது.

ரஜினிகாந்த், முரட்டுத் தனமாய் இதுதான் காட்சி என்று சொல்லியிருக்கலாம். சொல்லுகின்ற செல்வாக்கு அவரிடம் நிச்சயம் உண்டு. ரஜினிகாந்த் சட்டென்று விட்டுக் கொடுத்தார்.

"இந்தக் காட்சி எப்படியும் இருக்கலாம் சுரேஷ். உன் லாஜிக்கும் சரி. என்னுடைய லாஜிக்கும் சரி. ஆனால் உன் லாஜிக்கின்படியே இருக்கட்டும்." உதவி டைரக்டர்களுக்கு முன்னால் தயாரிப்பு நிர்வாகிகளுக்கு முன்னால் நடிகர் விஜயகுமாருக்கும் எனக்கும் முன்னால் மிகச் சுலபமாக அவர் விட்டுக் கொடுத்தார்.

சுரேஷ்கிருஷ்ணாவின் மதிப்பு அங்கே சட்டென்று உயர்ந்தது.

இப்படி சட்டென்று விட்டுக் கொடுத்து விட்டீர்களே என்று வேறு ஒருவர் எடுத்துக்காட்டி கேட்டபோது, "டைரக்டர் என்ன சொல்கிறாரோ அதைக் கேட்பதுதான் நடிகருக்கு நல்லது. சுரேஷ்கிருஷ்ணா என் மீது மிகுந்த மரியாதை உடையவர். அனுசரித்து போகக் கூடியவர். அதே சமயம் அவருக்கு சரி என்று தோன்றக் கூடியதைத் தயங்காமல் சொல்லக் கூடியவர். காரணமில்லாமல் சுரேஷ்கிருஷ்ணா வாதாட மாட்டார். அவர் மனதில் இந்தக் காட்சி பற்றி ஒரு தெளிவு இருக்கிறது. அதை நான் ஏன் கெடுக்க வேண்டும்.

இந்த இடத்தில் ரஜினிகாந்த் சொன்னது ஒன்று ஞாபகம் வந்தது. என்னை மதித்து, என் சொல் -பேச்சை பலர் கேட்கிறார்கள். கேட்கிறார்கள் என்பதற்காகவே நான் அதிகம் ஆடி விடக்கூடாது. பாட்ஷா நன்றாக வர வேண்டும் என்கிற அக்கறை சுரேஷ் கிருஷ்ணாவுக்கும் உண்டு. அந்த அக்கறையை நான் குறைவாக மதிப்பிட்டு விடக்கூடாது. சினிமா கூட்டு முயற்சி. இது டீம் ஒர்க் என்பதை எப்போம் எல்லோரும் ஞாபகம் வைத்துக்

கொள்ளவேண்டும். இன்று பிரபலமாகி விட்டேன் என்பதாலேயே எனக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்து விடக்கூடாது."

தன் செல்வாக்கும் தன்னைச் சுற்றியுள்ளவர்களும் என்பது பற்றி ரஜினிகாந்த் பேசியதை வரும் அத்தியாத்தில் சொல்கிறேன். அதைப் படிக்கும் போது தெளிவு என்பதற்கு மறு அர்த்தம் ரஜினிகாந்த் என்பது புரியும்.

தெளிவு உள்ளவர்களால்தான் பதட்டமில்லாமல் இருக்க முடியும்.

## 9

ஓஷோ என்று அன்பாய் அழைக்கப்படும் பகவான் ரஜினீஷ் மீது ரஜினிகாந்த் அவர்களுக்கு மிகுந்த மதிப்பு உண்டு. புனேயில் இருக்கும் பகவான் ரஜினீஷ் ஆஸ்ரமத்துடன் தொடர்பும் உண்டு.

வாழ்க்கையை வருத்திக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை என்பது பகவான் ரஜினீஷ் அவர்களின் கொள்கை.

இறை உணர்வு வளர அல்லது மலர்ந் மனதினராய் இருக்க வன்முறை உதவாது. வன்முறை என்பது அடிதடி ரகளை மட்டுமில்லை. தன்னைத்தானே வருத்திக் கொள்ளுதல்தான் மிகப் பெரிய வன்முறை. தன்னை வருத்தி துக்கம் அனுபவிக்கிற மனிதன்தான் மற்றவர்களுக்கு பெரும் தீங்கு செய்ய முடியும்.

கடும் பிரம்மச்சரியம், அல்லது நேர்த்திக்கடன், அல்லது வெகுதூரம் நடந்தே போவது அல்லது வேல் குத்திக் கொள்வது போன்றவைகளை பகவான் ரஜினீஷ் ஆதரிக்கவில்லை. இவைகளைச் செய்யும் போது பிறர் அறியாத மிகப் பெரிய மன எரிச்சலை. நாம் அடைவதுடன், இப்படிப்பட்ட விஷயங்கள் பிறர் கவனித்து பாராட்ட வேண்டும் என்ற கர்வத்திற்காகவும் செய்ய முயல்கிறோம். இதற்கு அங்கீகாரம் கிடைத்ததும் இந்த மன எரிச்சல் அதிகமாகிறது. இவ்விதம் நியதிகள் செய்யாதவர்கள் மீது செய்பவர் செய்யாதவர் என்கிற மனப்பிளவு- குழு மனப்பான்மை ஏற்படுகிறது. எல்லோரையும் நேசிக்கும், எப்போதும் நேசிக்கும் தன்மையை இந்த விரதங்கள் கொண்டு வருவதற்குப்

பதில் வெறும் கர்வத்தையே அளிக்கின்றன. கர்விகளால் கடவுளை உணர முடியாது.

அப்போது என்ன வழி.

உலகத்தில் சுகம் எனச் சொல்லப்படும் விஷயங்களை வெறுக்காது, மிதமாய் அனுபவித்தல். காமம் அசிங்கமல்ல. காதல் அதிகப்பிரசங்கித்தனமல்ல. நல்ல உணவு, உடை, வாசனைத் திரவியம், வாகன சுகம், பஞ்சு மெத்தை எவ்வியும் கர்வமல்ல.

எளிமையாய் இருப்பது என்பது இதமாய் இருப்பதுதான். ஏழையாய் வேடம் போடுவதல்ல.

கதர்ச்சட்டை, கதர்வேட்டி எளிமையா ஆமாம் - இரண்டு ஜோடிகள் மட்டும் இருந்தால். எழுபது கதர் சட்டைகள், வேட்டிகள் வைத்து ஒரு நாளைக்கு மூன்று உடுத்துபவர் எளிமையானவரா. நிச்சயம் இல்லை. இவரைவிட் கர்வி எவருமில்லை.

எதிலும் அதீத ஆர்வம் காட்டாது மிதமாய் செயல்கள் செய்து குறைவான படபடப்பும் ஆவேசமே இல்லாத நிலையும், துக்கம், சந்தோஷம் இரண்டையும் ஜீரணித்துக் கொள்கிற தன்மையே உயர்வு.

நம்மில் பலர் படபடப்புப் பிரியர்கள். எந்நேரமும் டென்ஷனாய் இருக்க பழகி விட்டவர்கள். இது வாழ்வை அனுபவிப்பதைக் கெடுக்கிறது. இந்த படபடப்புக்கு இணையாய் ஒரு வன்முறை இந்த படபடப்பை மறக்கத் தேவையாகிறது. நூறு மைல் நடந்து கோவிலுக்குப் போதல், நாற்பது நாள் விரதம் என்பதெல்லாம் படபடப்புக்கு எதிரான போராட்டம்தான். ஆனால் அடக்கி வைப்பது எதுவும் சீறும். சீறி முகத்தில் அடித்து ஆளைக் கவிழ்க்கும். விரதம் முடிந்த பிறகு விடுதலை வராது. படபடப்பு இன்னும் பெருகி நிற்கும்.

ரஜினிகாந்த், கடவுள் பற்றி பேச்சு வரும் போது என்னிடம் சொல்லியவையே மேற்சொன்ன விஷயங்கள்.

என் அமைதிக்குக் காரணம் நான் எந்த சுகத்தையும் ஒதுக்குவதில்லை. எந்த சுகத்தையும் அதுவே கதி என்று பிடித்துக் கொள்வதுமில்லை.

மழித்தலும் நீட்டலும் வேண்டா என்றால் என்ன அர்த்தம்.

கிராப்பும் வைத்துக் கொள்ளாதே மொட்டையும் அடித்துக் கொள்ளாதே என்றா...

இல்லை. இது பற்றி அதிகம் சிந்திக்க வேண்டாம் என்பதாய் நான் கருதுகிறேன். ஜடைமுடி, குடுமி வைத்துக் கொள்ளும் ஆசையோ, மழுங்க மொட்டை போட்டுக் கொள்ளும் குற்ற உணர்வோ இல்லை. முடி பற்றிய சிந்தனையோ அக்கறையோ இல்லை. இதுதான் நல்லது.


குடிக்கணும் குடிக்கணும் என்கிற ஆவல் அதிகமானால் வேலை நேரத்தில் மது அருந்த ஆசை வந்து செயல்பட்டு விடுவோம். இது சிக்கலுக்கு வித்தாகி விடும். வேலையை செவ்வனே முடித்து விட்டுப் போனதும் மரியாதையாய் சிரம பரிகாரம் செய்து கொள்ளலாம். வேலை செய்த சந்தோஷத்தை அப்போது அனுபவிக்கலாம்.

நல்ல மிருதுவான படுக்கை வேண்டுமா. வேண்டும். அப்படி ஒரு படுக்கை கிடைக்கவில்லையெனில்.

பெஞ்ச், பெஞ்ச் போதும். ஏன், எப்படி இது சாத்தியம்.

தானாய் தூக்கம் வரும்போது மிருது படுக்கையா - பெஞ்சா; எது சுகம். இரண்டுமில்லை. கனவுகளே இல்லாத ஆழ்ந்த தூக்கம்தான் சுகம். தூக்கமில்லாத நேரத்தில் எந்த படுக்கை கிடைத்தாலும் ஹிம்சைதான்.

## சினித்துளி



ஆயிரத்து தொள்ளாய ரத்து முப்பத்து நாலில் வெளி வந்த 'லவகுசா' என்ற படத்தில் அறு பத்து மூன்று பாடல்கள். ஆகவே இந்தப் படத்திற்கு 'சங்கீத லவ குசா' என்ற பெயரும் உண்டு. இப் போது இப்படி ஒரு திரைப்படம் வெளி வந்தால் ஆடுவோமா அல் லது தியேட்டரை விட்டு ஓடு வோமோ தெரியவில்லை.

எது பிடித்த உணவு. பசிக்கும்போது கிடைக்கும் உணவுதான் சுவைமிகுந்த உணவு.

பதட்டமாய் இங்கு இருக்கத் தேவையேயில்லை. இயற்கை மனிதனை அணைத்து காப்பாற்றுகிறது. சில சமயம் சீறி தண்டிக்கிறது.

இரண்டையும் ஏற்றுக் கொண்டு வாழ்தல் தவிர, இங்கு செய்ய வேண்டியது எதுவுமில்லை.

இது தெரிய எல்லோரிடமும் இதமாய் இருக்கலாம்.

இப்படியெல்லாம் பேசும் ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவாரா.

## 10

அவருக்கென்று சின்னச் சின்னதாய் சட்டங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்.

'டெலிவிஷனுக்கு ஒரு இன்டர்வியூ செய்யலாமா.' என்று யாராவது வந்து கேட்டால் இல்லை என்று மறுத்து விடுகிறார்.

ஏன் என்று நான் கேட்டபோது ரஜினிகாந்தைப் பார்க்க வேண்டுமென்றால் திரைப்படத்திற்கு வர வேண்டும் என்கிறார். திரைப்படத்தின் வலிமையை அசைத்துக் கொண்டிருக்கும் சின்னத்திரைக்கு நாமும் போய் விட்டால் சினிமாவுக்கு என்ன மதிப்பு என்று கேட்கிறார்.

மிகத் தெரிந்தவர்கள் கோயிலுக்கு, திருவிழாவிற்கு என்று ரசீது புத்தகம் எடுத்து வந்தால், தருவதில்லை என்று சொல்லி விடுகிறார். மிகவும் தெரிந்தவர்கள் வற்புறுத்தினால் மிகக் குறைவாகக் கொடுக்கிறார். ஏன் என்று இதற்கு காரணம் கேட்டேன்.

"நான் சம்பாதித்த காசை எப்படி தர்மம் செய்வது என்று எனக்குத் தெரியும். என்னிடம் காசு இருக்கிறது என்பதால் இந்த தர்மம் செய் என்று நீங்கள் கட்டளையிடாதீர்கள். 'இவ்விதமாக சம்பாதி... இந்த விதமாக சினிமா எடு... இத்தனை லாபம் இதனால் அடைந்து கொள்' என்று சொல்லாதவர்களுக்கு, இப்படி தர்மம் செய் என்று சொல்லவும் உரிமை இல்லை. இப்படி சொல்வது மிக மோசமான குணம் என்று நான் கோபிக்கவில்லை. வற்புறுத்தாதீர்கள் என்றுதான் சொல்கிறேன். கோவிலுக்குக் கொடுப்பதை விட,

கட்டடமாய், கற்சிலையாய் ஆவதை விட, நாளைய சரித்திரமாய் கல்வெட்டாய் ரஜினிகாந்த் பெயர் இருப்பதை விட, இன்றைக்குப் படிக்க ஆசைப்படும் பையனுக்கு - பாலுக்கு அழும் குழந்தைக்கு - திருமணத்தை விரும்பும் இளம் பெண்ணுக்கு என் காசு உதவி செய்யட்டும்.

தர்மத்தை உரக்கச் செய்வதில் பல பிரச்சினைகள் உண்டு. இவர் இந்த விதமாக தர்மம் செய்ய விரும்புபவர். ஆகவே இந்தவிதமாக ஏமாற்றலாம் என்று சிலருக்கு ஆசை வந்து விடும். மிகவும் திட்டமிட்டு அழுது புலம்பி உண்மை என நம்ப வைத்து சில ஆயிரம் ரூபாய்கள் யாரோ வாங்கிப் போய் விடுகிறார்கள். அவர்கள் ஏமாற்றி விட்டார்கள் என்று தெரிந்து நாம் மிகவும் வேதனைப்படுவோம். திருட்டுப் போனால் கூட சகித்துக் கொள்ளலாம். தர்மத்தின் பெயரால் ஏமாற்றப்பட்டோம்... கருணையின் பெயரால் கண்மறைக்கப்பட்டோம் என்று தெரியும்போது மிகுந்த வேதனை ஏற்படுகிறது.

இதன் விளைவு எல்லார் மீதும் அவநம்பிக்கை பிறக்கிறது. உண்மையாகவே நிராதரவாய் - மிக அவசரமாய் மிகவும் தகுதியான ஒரு நபருக்கு உதவி தேவைப்படுகிறபோது, அவர் உதவி கேட்டு அழுகிறபோது, பொய்யோ என்று தோன்றி விடுகிறது. மறுபடியும் ஏமாற்றப்படுகிறோமோ என்கிற சந்தேகம் வருகிறது.

உண்மையாகவே உதவி தேவையானவருக்கு உதவி செய்யாமல் மறுப்பது ஏமாந்து போனதைவிட மிகக் கொடுமையானது. நெருப்பை மிதித்தது போல அடடா... உதவி செய்யாது போய் விட்டோமே என்று பதட்டமடையச் செய்வது, பத்துப் பேரில் ஆறுபேர் ஏமாற்றினாலும் பரவாயில்லை... நாலு பேருக்காவது உண்மையாய் உதவ முடிகிறதே என்கிற சந்தோஷம் வருகிறது.

"பாலகுமாரன் சார், இன்றைக்கு இந்தியாவில் பணக்காரனாய் இருப்பது கொடுமை. ஏழையை விட பணக்காரனுக்குத்தான் ஏகப்பட்ட சோதனை. பணம் வர வர மனிதன் மிக பயங்கரமாகத் தனிமைப்படுத்தப்படுகிறான். ஆனால் எல்லோரும் பணக்காரனாகவே ஆசைப்படுகிறார்கள். எனக்கு

பணக்காரர்களைப் பிடிக்காது. அவர்கள் காட்டும் பல்வேறு விதமான கம்பீரங்களை நான் சோகத்தோடும், ஆச்சரியத்தோடும் பார்த்து வருகிறேன். ஆனால் காசையெல்லாம் என்கிட்ட கொடுத்துடு, ஏழையாய் மாறி விடு என்று சொல்லுவார்கள். நான் சம்பாதித்த காசோடு ஒட்டாமல் இருக்கிறேன் என்பது இவர்களுக்குப் புரியாது. உங்களுக்கும் புரிய வாய்ப்பில்லை. இது, என் மனம் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம். இதோ 'பாட்ஷா' முடித்து விட்டு நான் ரிஷிகேசம் போகப் போகிறேன். அங்கு போய் தனிமையில் இருப்பேன். இதைச் சொன்னால் யரா் புரிந்து கொள்வார்கள். யாரிடம் இதைப் பகிர்ந்து கொள்ள முடியும். பணம் இருந்தால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைக்கிறார்கள். பணம் நிறைய பிரச்சினைகளைத்தான் தரும். பணம் பயத்தையும் அவநம்பிக்கையையும்தான் தரும். சொன்னால் நம்ப மாட்டார்கள். காரணம் இங்கு பணக்காரர்கள் குறைவு. அப்படி இருக்கிற சில பணக்காரர்களும் இந்த உண்மையைச் சொல்வதேயில்லை. இந்தியாவில் மட்டுமல்ல, எங்கேயுமே மிடில்கிளாஸாய் இருப்பதுதான் சுகம். இது விவாதித்துப் புரிந்து கொள்ள வேண்டியவிஷயமில்லை. இது உணர்ந்து கொள்ள வேண்டிய விஷயம்.

பாலகுமாரன் சார், பணக்காரர்களுடைய இன்னொரு பயம் என்ன தெரியுமா. கடன் கேட்கும் நண்பர்கள். எனக்கு கடன் வாங்குவதும் பிடிக்காது; கொடுப்பதும் பிடிக்காது. ஆனால் அதே நேரத்தில் யாருக்கு என்ன உதவி தேவையோ, எவ்வளவு உதவி தேவையோ அதை உணர்ந்து சந்தோஷமாய் என்னால் செய்ய முடியும்.

நானாய் போய் நிற்காமல், அள்ளிக் கொடுக்கிறோம் என்கிற கர்வத்துக்கு ஆளாகாமல் என் நண்பர் சத்யநாராயணன் மூலமாக நான் தவறாது கொடுத்துக் கொண்டிருக்கிறேன். கடவுள் எனக்குக் கொடுத்ததிலிருந்து ஒரு சிறு பகுதியை தினம் கொடுக்கிறேன்.

என்னை எங்கேயும் முக்கியமானவனாய் திணித்துக் கொள்ள எனக்கு விருப்பமில்லை. நான் முக்கியமானவனாக மாற்றப்பட்டு விட்டேன். இவ்வளவு

பிராபல்யம், இவ்வளவு முக்கியத்துவம் எனககு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இந்த முக்கியத்துவத்தை இன்னும் ஏதோவிதமாக மாற்றிக் கொள்ளவேண்டிய ஆத்திரம் எனக்கு இல்லை. என்னால் அரசியலில் ஈடுபட முடியாது. ஈடுபட எனக்கு விருப்பமில்லை."

"நாளை என்ன நடக்கும் என்று தெரியாது என்று கூடவே ஒரு வாக்கியமும் போட்டு வருகிறீர்களே." நான் கேட்டேன்.

"ஆமாம். இருபது வருடம் முன்பு இந்த பஸ் கண்டக்டர் மிகப் பிரபலமான நடிகராக முடியும் என்று கேட்டால் நிச்சயம் முடியும் என்று சொல்வீர்களா, இல்லை. முடியவே முடியாது என்று சொல்வீர்களா... இந்த இரண்டு பதில்களுமே தவறானவை இல்லையா. ஆனாலும் ஆகலாம் என்றுதான் அப்போது சொல்லியிருப்பீர்கள். அப்படி சொல்வதுதான் அழகு. எதிர்காலத்தில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். நிலவில் நெருப்பெரியலாம். சூரியனின் சூடு குறையலாம். ஆண் பெண்ணாகலாம். பெண் ஆணாகலாம். ஏற்றம் இறக்கம் எது வேண்டுமானாலும் நிகழலாம். நான் விரும்பிய வண்ணம் என் வாழ்க்கை அமையவில்லை. அதே போல் நான் விரும்பாத அரசியலில் நான் ஈடுபட நேரலாம். இந்த 'பாட்ஷா' படத்தின் வெற்றியைக் கூட நான் கடவுளிடம் விட்டு விடுகிறேன். என் எதிர்காலம் முழுவதும் இறைவனின் விழி அசைப்பில் இருக்கிறது. இப்படி நினைக்க என் மனபாரம் குறைகிறது.


செய்தல், செய்யாதிருத்தலில் எனக்கு பிடிவாதம் இல்லை. நாளையைப் பற்றிப் பேசுவதைவிட, இன்றைக்கு இந்தக் கணம் கையிலிருக்கும் வேலையை செம்மையாய்- முழு ஈடுபாட்டோடு செய்வோம். இன்றைய நேர்மை, இன்றைய உழைப்பு, நாளைய வாழ்க்கையைச் சரிசெய்யும். இன்றைய திமிர், இன்றைய அகங்காரம், இன்றைய சோம்பல் - நாளைய வாழ்க்கையைப் பாதிக்கும். வாழ்க்கை என்பது இறந்த காலம். நிகழ்காலம், எதிர்காலம் மூன்றும் கொண்டது. இறந்தகால அனுபவத்தால், நிகழ்காலத்தில் தெளிவாய் நிதானமாய் செயல்பட, எதிர்காலம் சிறப்பாய் இருக்கும். நம் வாழ்க்கை நம் கையில் என்பதற்கு நான்

இப்படித்தான் அர்த்தம் பண்ணிக் கொள்கிறேன். இந்தத் தெளிவு வர, எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்கிற மனோநிலை வரும். இந்த மனோநிலை வர இந்த தெளிவு வரப்படும். தெளிவால் அமைதி. அமைதியால் தெளிவு. இப்படித்தான் வாழ்க்கை நகர்கிறது."

இத்துடன் இந்தக் கட்டுரைத் தொடரை முடித்துக் கொள்கிறேன். ரஜினிகாந்த் ஒரு அற்புதமான சரித்திரம். அது தமிழ் நாட்டில் ஏன்... இந்தியாவின் பலகோடி மக்களைத் தாக்கி பரவசப்படுத்தியிருக்கிறது. அந்த சரித்திரப் பிரசித்தி வாய்ந்த மனிதரோடு நானும் சில நாட்கள் பேசி சிரித்துப் பழகினேன் என்கிற பாக்கியத்தைக் கொடுத்திருக்கிறது. அந்த கர்வமில்லாத மனசு என்னுள் ஒரு சலனத்தை ஏற்படுத்தி, எனக்குள்ளும் அந்தக் குணத்தை தளர்த்தியிருக்கிறது. கர்வம் கொள்ள இங்கு எதுவுமே இல்லை என்கிற தன்மை வளர்ந்திருக்கிறது. புத்தகத்திலிருந்து படிப்பதை விட, மகரிஷிகள் வாய்மொழியாய் கேட்பதை விட, ஒரு மனிதனின் வாழ்க்கையை அருகிலிருந்து பார்க்கும் போது நல்லவைகளின் தாக்கம் பலமாயிருக்கிறது.

நான் அவருக்கு மிகவும் நெருங்கிய நண்பனில்லை. அவர் உள்ளும் புறமும் அறியும் நெடுநாள் தொடர்பும் எனக்கு இல்லை. ஒருவருக்கொருவர் அடையாளம் தெரிந்த இரண்டு மனிதர்கள். எழுபது நாள் ஒரே தொழிலில் ஈடுபட்டவர்கள் என்பதன் விளைவுதான் இந்தக் கட்டுரை. ரஜினிகாந்த் எட்ட நின்று என்னைத் தொட்ட நிலா. தவறு... நிலவில்லை. அவர் சூரியன் - ஞானசூரியன். அந்த சூரியனோடு சில நாட்கள் நெருங்கி வலம் வந்தேன். இனி பாதை வேறு வேறு ஆனது. இருப்பினும், விலகி நின்று அந்தச் சூரியனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன். இந்தக் கட்டுரையில் சில தகவல் தவறுகள் இருக்கலாம். ஆமெனில் சம்பந்தப்பட்டவர்கள் மன்னித்து விடக்கோருகிறேன். ரஜினிகாந்த் என்கிற இனிய மனிதனின் பார்வையை ஒட்டி எழுதப்பட்ட கட்டுரை இது. தமிழ் சரித்திரத்தில் அசையா இடம் பெற்ற இந்த மனிதனின் சிறப்பு மேன்மேலும் வளர என் சத்குரு திருவண்ணாமலை மஹான் யோகி ராம்சுரத்குமார் அவர்களை மனமாரப் பிரார்த்திக்கிறேன்.

●


சூரியனோடு
சில நாட்கள்
பாலகுமாரன்